# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 03 வியாழக்கிழமை (15-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:80


# நேரடிப் பேச்சுக்கு நேரம் நெருங்குகிறது

## கதிர்காமர் கூறுகின்றார்

லண்டன்,பெப்ரவரி15

**அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சு நடத்துவதற்கு நேரம் நெருங்குகின்றது என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகின்றார்.**

**பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.**

அந்தப் பேட்டியில் அமைச்சர் கதிர்காமர் மேலும் கூறியிருப்பதாவது:-

இந்த 20 ஆண்டு காலப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதைப் புலிகள் கூட விரும்புகின்றார்கள் என நான் கருதுகின்றேன்.

சமாதான முயற்சிகளில் நிச்சமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நேரடிப் பேச்சுக்கு வெகுகாலம் செல்லும் என நான் நினைக்கவில்லை. சில மாதங்கள் ஆகலாம்.

பேச்சு நடப்பதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகவே நான் கூறுவேன்.

புலிகளின் பிரதேசத்துக்குத் தங்கு தடையின்றி பொருள்களை அனுப்புவது குறித்து அரசு உண்மையில் பரிசீலித்து வருகின்றது.

பேச்சுக்கு முன்பாகப் போர் நிறுத்தம் கண்டிப்பாக வரவேண்டும் என்று நோர்வே மத்தியஸ்தர்களிடம் புலிகள் கூறவில்லை. இது புலிகள் பகிரங்கமாகக் கூறுவதற்கும் பேச்சுக்கான அவர்களின் பேரத்துக்கும் இடையில் பெரியவெளி இருப்பதையே காட்டுகின்றது.

புலிகளைத் தடை செய்யும் விவகாரத்தில் பிரிட்டன் தன் கடமையை சரிவர நிறைவேற்றும் என நான் உறுதியுடன் நம்புகின்றேன்.

ஒருவேளை, புலிகளை பிரிட்டன் தடை செய்யாது விட்டால் அது, இலங்கையின் மக்களைப் பெரிதும் கைவிட்டால் போல் இருக்கும். தவிர, இது விடயத்தில் இலங்கை அரசும் தனது மனக் குறையினை வெளிப்படுத்த ராஜீக முறையிலான வழிவகைகள் குறித்துப் பரிசீலிக்கும். - என்றார். (உ)



## றொக்கட் லோஞ்சருடன் கொள்ளைக் குழு

கொழும்பு,பெப்.15

படையினரிடம் இருந்து திருடப்பட்டதாகக் கருதப்படும் 40 மி.மீ. றொக்கட்லோஞ்சரை வைத்திருந்த குழு ஒன்றை அறளங்வில்ல பொலீஸார் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கொள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட சிப்பாய் ஒருவரையும் அவரது குழு வினரையும் கைது செய்யப் பொலீஸார் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

## மாணவருக்கு எச்சரிக்கை!

வவுனியா,பெப்.15

புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டாம் என பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரும் வகையில் வவுனியாவில் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாக மாணவர்கள் குழு ஒன்று வளாக வாசலில் விசாரணக்கு உட்படுத்தப்பட்டது.

அந்த மாணவர்களிடம் இருந்த-250பேரின் கையொப்பம் பெறப்பட்ட பிரதிகளை பறிமுதல் செய்த படையினர், எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தனர்.

இதேவேளை -

மேற்படி மாணவர் குழுவில் இடம்பெற்ற மூவரைக் கைதுசெய்ய படையினர் முயன்றனர் எனவும்-

எனினும் வளாகத்தின் பீடாதிபதி இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இந்தக் கைது முயற்சி கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7-164)

## தரைவழிப் பாதை திறப்பதும் புரிந்துணர்வு உடன்பாட்டில்?

### அரசு முன்வைக்கும் திருத்தம் இது!

கொழும்பு,பெப்.15

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வே அரசால் முன்வைக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டில் அரசதரப்பு சில திருத்தங்களைச் செய்துள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது போன்று வட பகுதி மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கினாலும் ஒரு சில பொருள்களுக்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டிருக்கும் என்றும் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் ஊடாக வட பகுதிக்கான தரை வழிப்பாதை ஒன்றைத் திறப்பதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும் என்றும் -

அரச தரப்பில் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அண்மையில் கொழும்பு வந்திருந்தபோது இந்தத் திருத்தங்களை அரசுத் தரப்பு அவரிடம் சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ம)

## 8 புலிகள் உயிரிழப்பு?

கொழும்பு,பெப்.15

படையினரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட பொன்னார் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் 8 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ம)

# கிண்ணியா அருகே நேரடிச் சமர் 2 படையினர் பலி! இருவர் காயம்!!

கொழும்பு,பெப்.15

திருகோணமலையில் இருந்து வடபகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கிண்ணியாப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மோதல்கள் இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கிண்ணியாவில் இருந்து 5கிலோமீற்றத் தொலைவில் உள்ள சூரன்கல் மற்றும் மணிராசகுளம் ஆகிய முஸ்லிம் கிராமங்கள் ஊடாக இரவு 10.30 மணியளவில் 150 முதல் 200 பேர் வரை கொண்ட விடுதலைப் புலிகளின் குழு ஒன்று சென்று கொண்டிருந்ததாகவும் -

தரைப்படையினர் இந்தக் குழு மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து அங்கு மோதல் மூண்டதாகவும் -

இந்த மோதலில் இரு படையினர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயம் அடைந்ததாகவும் -

ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப் புலிகளின் மூன்று சடலங்களைக் கைப்பற்றியதுடன் ஒருவரை உயிருடன் கைது செய்துள்ளதாகவும், ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாகவும் தகவல நிலையம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ-ம)

## வீடு தீக்கிரை!

கொழும்பு,பெப்.15

கடந்த வாரம் ஐ.தே.கட்சி கண்டியிலிருந்து நடத்திய பாதயாத்திரையின் போது கண்ணில் காயத்துடனும் கையில் மதுப் போத்தலுடனும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்று வேடமிட்டு வந்த கமலாவதி என்ற பெண்ணின் வீடு நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டது.

வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதோர் அங்கிருந்தோரைப் பயமுறுத்தி வெளியேறுமாறு உத்தரவிட்டபின் வீட்டுக்குத் தீ வைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மோ. சைக்கிள் திருட்டு நபர் அகப்பட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.15

வழக்கு ஒன்றுக்காக யாழ். நீதிமன்றத்துக்கு வந்த ஒருவரின் 'யமஹா' மோட்டார் சைக்கிள் நீதிமன்றத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சமயம் நேற்று மாலை அது திருட்டுப்போனது. அது குறித்து முறைப்பாடு கிடைத்ததும் உடன் நடவடிக்கை எடுத்துப் புலன் விசாரணை நடத்திய யாழ். பொலீஸார் ஒரிரு மணித்தியாலத்தில் கொட்டடி சீனிவாசகம் வீதிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மோட்டார் சைக்கிளை மீட்டனர்; திருட்டுச் சந்தேக நபரையும் கைதுசெய்தனர்.

## 4 படையினர் காயம்

கொழும்பு,பெப்.15

தென்மராட்சியில் கிளாலி மற்றும் பொன்னார் பகுதிகளில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் நான்கு படையினர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ம)

## சிப்பாய்க்கு பிணை அனுமதி

மட்டக்களப்பு,பெப்.15

மட்டக்களப்பு செட்டிப்பாளையத்தில் கடந்த வாரம் குடும்பப் பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படைச் சிப்பாய் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்தப் பெண் மீது சந்தேக நபர் குற்றம் இளைத்ததற்கான சான்றுகள் இல்லை என்று சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டிருந்ததை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி பிணை அனுமதி அளித்தார்.

வீட்டிற்கு அருகில் இருந்த காட்டில் விறகு வெட்டச் சென்ற சமயம் சந்தேக நபர் தன்னை பற்றைக்குள் இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக அந்தப் பெண் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தது தெரிந்ததே. (உ-ம-21)

## 3 இடங்களில் விசாரணை

யாழ்ப்பாணம்,பெப்.15

சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள குற்றப் புலனாய்வுக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் ஒரே சமயத்தில் மூன்று இடங்களில் விசாரணை நிலையங்களை அமைத்து விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே யாழ்.பொலீஸ் நிலையத்தில் தமது விசாரணைகளை இக்குழுவினர் ஆரம்பித்துள்ளனர்.

அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்தோர் விசாரணைக்குச் சமுகமளிக்க வசதியாக சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் இந்த விசாரணை நிலையங்கள் அடுத்து வரும் நாள்களில் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## அமெரிக்கத் தூதர் மட்டக்களப்புக்கு விஜயம்

மட்டக்களப்பு,பெப்.15

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தலைமையிலான குழு ஒன்று நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டது.

தூதருடன் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினட் கேணல் பிராங் றியடோன், பிராந்திய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஸ்ரீபன் ரைட் ஆகியோரும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

இந்தக் குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம், 233ஆவது படைப்பிரிவு உயரதிகாரிகள் மற்றும் பொலீஸ், விமானப்படை உயரதிகாரிகள் ஆகியோரையும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர். (ம)

## ஜனாதிபதியின் ஊடகச் செயலர் பதவி நீக்கம்

கொழும்பு,பெப்.15

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஊடகச் செயலாளர் ஐ.எம்.கே. மகாநாம பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது திடீர் பதவி நீக்கத்துக்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்தப் பதவியை வகித்த ஐந்தாவது நபர் இவராவார். (ம)

## ஆஸி. தூதருடன் தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

கொழும்பு,பெப்.15

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதர் பீற்றர் ரோவை பத்துத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று மாலை கொழும்பில் சந்தித்துப் பேசினர். (உ)

## போலி முகவர் கைது

வவுனியா,பெப்.15

ஐரோப்பிய நாடுகளுக்கு தமிழ் இளைஞர், யுவதிகளை அனுப்பி வைப்பதாகக் கூறி அவர்களிடம் இருந்து ரூபா 25 லட்சத்தைச் சுருட்டியதாகக் கூறப்படும் போலி முகவரான முஸ்லீம் ஒருவர் நேற்று வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

செய்னூன் அப்துல் முத்தலிப் (வயது 35) என்ற இந்த நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

இந்த நபரைப் பிணையில் விட ஆட்சேபனை இல்லை என நீதிமன்றப் பொலீஸார் தெரிவித்தனர். இதனையடுத்து பெரிய குற்றச் செயல்களைப் புரிந்தவர்களைப் பிணை யில் விடுவிக்க தமக்கு ஆட்சேபனை இல்லை எனப் பொலீஸார் தெரிவிப்பது குறித்து வவுனியா பொலீஸ் அத்தியட்சகர் நீதிமன்றுக்குத் தகவல் தரவேண்டும் என நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (உ-7-164)

## கைதடியில் நேற்று மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.15

கைதடி வடக்கு, கைதடி தென்கிழக்கு, கைதடி மேற்கு ஆகிய 3 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 301 குடும்பங்கள் கைதடிப் பகுதியில் மீளக்குடியமர நேற்றுப் படையினரால் அனுமதிக்கப்பட்டனர்.

இன்று கைதடி மத்தி கைதடி கிழக்கு, கைதடி தெற்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-173)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

மாதகல்

**புனித லூர்து அன்னை கெபித் திருவிழா**

**18-02-2001**

17.02.01 சனிக்கிழமை - மாலை 3.00 மணி - *திருச்சுரூப பவனி*
மாலை 5.00 மணி - திருப்பலி
நற்கருணை ஆராதனை
18.02.01 ஞாயிறு தினம் - காலை 8.00 மணி - திருவிழாத் திருப்பலி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பங்குத் தந்தை,
பங்கு மக்கள்.

(84190)



**வாழ்த்துகின்றோம்**

துன்னாலை தெற்கு
**ஸ்ரீ பூதேஸ்வர சிவன் தேவஸ்தானதிற்கு**
விரைவாக புதிய மின்கம்பங்கள் நடப்பட்டு
புதிய இணைப்பை வழங்கியதற்கு
இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாணம் மின் அத்தியட்சகர்
**திரு.வேலுப்பிள்ளை**
அவர்களுக்கும் சக ஊழியர்களுக்கும்,
இலங்கை மின்சாரசபை மாலுசந்தி மின் அத்தியட்சகர்
**திரு.இராசலிங்கம்**
அவர்களுக்கும் சக ஊழியர்களுக்கும்
எமது ஆலயத்தின் சார்பில் வாழ்த்துக்கள் கூறியும் நன்றிகள் தெரிவித்தும் உங்கள் எல்லோருக்கும் சிவன் திருவருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்கின்றோம்.

*ஸ்ரீ பூதேஸ்வரர் தேவஸ்தானம்,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*
(C/15312)
*தர்மகர்த்தாவும்*
*நிர்வாக சபையினரும்.*


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி தம்பிராசா யோகம்மா

தோற்றம்
13-02-1927

மறைவு
17-01-2001

எமது அன்புத் தாயாரும் மாமியாருமான திருமதி தம்பிராசா யோகம்மா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நோயுற்று இருந்த வேளை உதவி செய்தவர்களுக்கும், தொலைபேசி, பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் முன்னின்று உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.02.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்களும் சமுகம் தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*187, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
த.விஜயகாந்தன் (மகன்),
த.ஜெயசீலன் (மகன்),
க.ஜீவகாருண்யம் (மருமகன்),
சி.யோகலிங்கம் (ஜெயம்) (மருமகன்)

(84174)

# சித்திரவதைகள் தொடர்பான விசாரணைக்கு 155 பேர் அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக கொழும்பில் இருந்து வந்துள்ள குற்றப் புலனாய்வுக் குழுவினர் யாழ்.பொலீஸ் நிலையத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அழைக்கப்பட்டோரில் ஒரு சிலரே நேற்று விசாரணைக்கு சமுகமளித்ததாக குழுவினர் தெரிவித்தனர்.

விசாரணக்கு அழைக்கப்பட்டிருக்கும் 155 பேரின் பெயர் விவரங்களை புலனாய்வுக் குழுவினர் நேற்று வெளியிட்டுள்ளனர். அவர்களில் ஒரு தொகுதினரின் பெயர் விவரங்கள் இன்று பிரசுரமாகின்றன. எஞ்சியவை நாளை உதயனில் வெளியாகும்.

சம்பந்தப்பட்டோரை உடனடியாக விசாரணக்குச் சமுகமளிக்குமாறு குற்றப் புலனாய்வுக் குழு கேட்டிருக்கிறது.

அவர்களின் விவரம் வருமாறு:-

மகேந்திரராஜா நல்லையா (21, ஈச்சமோட்டை வீதி,யாழ்.), ஐயாதம்பி உதயகுமார் (மீசாலை மேற்கு, மீசாலை), முருகன் ஜெயரட்ணம் (மறவன்புலோ, சாவகச்சேரி), முருகன் சிவராசா (மறவன்புலோ, சாவகசசேரி), ஜி.கிருபாகரன் (கைதடி, நாவற்குழி தெற்கு), ராஜரட்ணம் அஜன் (24, பிராடி ஒழுங்கை, அரியாலை), பரமானந்தன் தேவேஸ்வரன் (கோவிலாக் கண்டி, கைதடி), கதிரவேல்பிள்ளை கேதீஸ்வரன் (கைதடி, நாவற்குழி), சிவசம்பு விஜயகாந்தன் (14, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத் துறை கிழக்கு),ரி.அன்ரனி தெய்வேந்திரன் (அம்மன் கோயிலடி, சாவகச்சேரி வடக்கு), ரி.ரமேஷ் லோகநாதன் (அம்மன்கோயிலடி, சாவகச்சேரி வடக்கு), என்.பகீரதன் (அம்மன் கோயிலடி, சாவகச்சேரி வடக்கு), ரட்ணம் ராஜேந்திரன் (மீசாலை தெற்கு, மீசாலை), ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக்ற் (கேரதீவு, வீதி, நாவற்குழி, கைதடி), அன்ரனி திலகரட்ணம் (கைதடி, நாவற்குழி தெற்கு), அருணந்தி கோடீஸ்வரன் (கைதடி நாவற்குழி கிழக்கு), கந்தசாமி புஷ்பலதா (மந்துவில் மேற்கு, கொடிகாமம்), தாமோதரம்பிள்ளை இதயகுமார் (மீசாலை கிழக்கு, மீசாலை), சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் (தடமலைச் சந்தி, சமலன்குளம், ஒட்டுசுட்டான்), கதிரவேலு விஜிதரன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), சுப்பிரமணியம் சுதாகரன்(56, முள்ளி வீதி, அரியாலை), மகேஸ்வரன் தயாபரன் (அறுகுவெளி, தனங்களப்பு), ஆறுமுகம் தங்கராஜா (மீசாலை மேற்கு), வல்லிபுரநாதன் பவானந்தன் (கச்சேரி வீதி, கொடிகாமம்), கனகலிங்கம் அமிர்தலிங்கம் (கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு), மகேந்திரன் கேதீஸ்வரன் (பனிகுளம், சுழிபுரம்), ஜோசப் கணீஸ்வரன் (53/3, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்

(11 ஆம் பக்கம் பார்க்க)


**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், தேவயானி, ரகுவரன், அம்பிகா
மற்றும் பலர் நடிப்பில்
**வல்லரசு**
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
நாளை (16.02.2001) முதல்
கண்ணன் வருவான்
(C/15058)

**லஷ்சுமி** இணுவில்
பிரசாந்த், லைலா, வையாபுரி
நடித்த
**பார்த்தேன் ரசித்தேன்**
(ரீலஸ்) காட்சிகள்:11.00, 2.30(பு.நே.)
(84191)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
பிரபுதேவா-சரத்குமார்
ஜெயாசீல நடித்த
**பெண்ணின் மனதைத்தொட்டு**
(ரீலஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(C/15278)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை நேற்று (14.02.2001) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் கதிரேசு - கதிரேசு கண்ணகைப்பிள்ளை ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி (அதிபர்), நல்லையா(Doctor)ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற ச.வே.கணபதிப்பிள்ளை(ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், க.சிவகாமசவுந்தரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, சரவணபவன்(நிர்வாக உத்தியோகத்தர், யா/மாநகரசபை) கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமநாதன்(K.S.K மோட்டோர்ஸ் - சாவகச்சேரி) சுந்தரலிங்கம் (ஜேர்மனி), நளாயினி (கலைமகள் பாலர் கழகம், நகரசபை - சாவகச்சேரி), சவுந்தரநாயகி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15-02-2001) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் சுதுமலை வீதி, தாவடிச்சந்தியில் அமைந்துள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வீதி,*
*தாவடிச் சந்தி,*
*கொக்குவில்.*
(84185)

தகவல்:
க.சரவணபவன்
(மகன்)

## பாலசுப்பிரமணியம் அகிதர்

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இந்தியாவில் வசித்து வந்த வருமான பாலசுப்பிரமணியம் அகிதர் 30.10.2000 திங்கட்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிறைசூடி பாலசுப்பிரமணியம்(பாலு) - மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும் வித்யநிர்பதி (வலி.கிழக்கு பிரதேசசபை), அனுசன், பிரணவன், அபூர்ஜிகா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.11.2000 புதன்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*புத்தூர் மேற்கு, புத்தூர்.*
(84170)

தகவல்:
வித்யநிர்பதி (வித்தி)
சகோதரன்.

## திருமதி செல்லையா நல்லம்மா

உடுவில் கிழக்கு, நாகம்மாள் கோயில் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா நல்லம்மா அவர்கள் நேற்று (14.02.2001) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆள்வார் ஐயாக்குட்டி - மேரி செல்வம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் ஜெயரத்தினம், ஜெயமலர், ஜெயசிங்கம் ஆகியோரின் அருமைத் தாயாரும், A.D முருகேசு (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பிராசா(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்), ஆகியோரின் அருமைச் சகோதரியும், மகேஸ்வரி, இராசகோபால்(முன்னாள் இயக்குநர், பொறியியல் பகுதி, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் ), பிலோமினா (சாந்தி), ஆகியோரின் அன்பு மாமியாரும் மோகனதாஸ்(லண்டன்), ஜெனிற் நிலானி(சுவிஸ்), றமணதாஸ்(H.N.D.A மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு), பாலேந்திரதாஸ்(மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), றேணுகா, றதிக்கா, தேசிசன், விதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிருபறுக்சனி, ஜெனுசியா, கோனுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2001) வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*உடுவில் கிழக்கு,*
*உடுவில்.*
(84175)

தகவல்:
ச.இராசகோபால்
(மருமகன்)

## தம்பிப்பிள்ளை செல்வராசா

**(சின்னண்ணை)**

நந்தாவில், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை செல்வராசா நேற்று (14-02-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை சிவக்கொழுந்துவின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மாவின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா (ஓவசியர்), நாகரத்தினம்(U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வகுமாரி(U.K), ஜெயகுமாரி, விஜயகுமாரி(U.K), சிவகுமார் (Germany) உதயகுமாரி, இரத்தினகுமார்(France), லவகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேந்திரநாதன்(U.K) சிவலிங்கம் (வர்த்தகர்-மாத்தறை), ஜெயக்குமார்(U.K), கோபாலகிருஷ்ணன் (சாயி ஸ்ரோர்ஸ் கோயில் வீதி கொக்குவில்) வத்சலா(France) ,கேசவன் (Nationals Vedio Center - K.k.S. Rd. Kokuvil) ஆகியோரின் அன்பு மாமனாரும், வான்மதி (U.K), ஐங்கரன்.(U.K) அஜந் தன்(U.K) சிவாஜினி, சிந்துஜா, அரவிந்தராசா (U.K) ,சங்கீதா(U.K), தக்ஷாயினி, பிரவின்ராஜ், சகானா(France), அடானா((France) துரயோன், சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15-02-2001) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*நந்தாவில்,*
*கொக்குவில்.*
(84182)

தகவல்:
செ.சரஸ்வதி
(மனைவி)

# உதயன்

## நல்ல முடிவு

அடுத்த ஆண்டு தொடக்கம், பாடசாலைகளில் ஜி ஈ. உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடங்கள் ஆங்கிலத்தில் போதிக்கப்படும். இதற்கான முடிவைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது ஆங்கிலம் மூலம் கல்வி போதிக்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்தே இந்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி. மெல் தெரிவித்திருக்கிறார்.

இன்றைய நவீன விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுத்து எமது இளஞ்சந்ததியினர் — வருங்காலப் பிரசைகள் — முன்னேற வேண்டுமாயின் ஆங்கில மொழி மூலமான போதனை அவசியமே.

1956 ஆம் ஆண்டின் சுய மொழி மூலமான பாட போதனை நடைமுறைக்கு வந்த பின்னர், ஆங்கில போதனையில் நாட்டம் குறைந்தது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாமலே, அதில் சித்தி அடையாமலே, பல்கலைக்கழகம் வரை சென்று படித்துத் தேறலாம் என்ற நிலை உருவானது.

அதனால் மாணவர்கள் ஆங்கிலம் பயில்வதில் அக்கறை செலுத்தவில்லை; பெற்றோர்களும் அது விடயத்தில் அசட்டையாக இருந்தனர். அதன் பாதகமான விளைவை இப்போது எல்லாத் தரப்பினர்களும் உணர்கிறார்கள்.

இன்றைய கணனி யுகத்தில், தகவல் தொழில்நுட்ப யுகத்தில், துரித விஞ்ஞான வளர்ச்சி யுகத்தில் ஆங்கிலத்தின் தேவை மிகப் பெரிய அளவில் உணரப்படுகிறது. தகவல் தொழில் நுட்ப மற்றும் விஞ்ஞானத் துறைகளில் தேர்ச்சி பெறவும் முன்னேறவும் ஆங்கில அறிவும், வன்மையும் அவசியமாகி விட்டன.

தகவல் தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகளில் முன்னேற்றங் கண்ட நாடுகளில் அத்துறைகள் சார்ந்த பல பிரிவுகளில் வேலை வாய்ப்புகளும் உள்ளன.

இந்தியாவில் மாணவர்கள்— இளைஞர்கள்—ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பதால், தகவல் தொழில் நுட்பங்களைப் பயிலும் வாய்ப்பு இருப்பதால் ஜேர்மனி போன்ற வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்கிறார்கள்.

கடந்த நாலரைத் தசாப்தங்களாக ஆங்கிலம் பயில்வதில் நூறுவித அக்கறையின்மை இருந்தமையால், எமது இளைஞர்கள், மாணவர்கள், தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற முடியாமையால் இத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பில்லை.

இனிமேலும் ஆங்கில அறிவு பெறுவதற்கு எமது மாணவர்கள், இளைஞர்கள் தயக்கம் காட்டினால்— பின்னடித்தால் —எதிர்காலம் எல்லா வகைகளிலும்இருள் அடைந்துவிடும்.

கடந்த 45 வருடங்களாக விட்ட தவறினால் மூன்று சந்ததி இளைஞர்கள் ஆங்கில அறிவற்றவர்களாகப் பாதிப்புற்றுள்ளனர். அவர்கள் போன்று இப்போதைய இளம் சந்ததியினரும் பாதிப்புறாமல் கல்வி அமைச்சின் புதிய முடிவு தடுக்கும்.

சுயமொழிக் கல்வியைக் கைவிடாது, அதேவேளையில் ஆங்கில போதனைக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுவது அவசியம். நவீன தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கு பயிலவேண்டிய பாடங்களை உயர் வகுப்பில் ஆங்கிலத்தில் போதிப்பது எதிர்கால வளத்துக்கும் முன்னேற்றத்துக்கும் கைகொடுக்கும் — துணை புரியும்.

அதனால், கல்வி அமைச்சின் புதிய முடிவு வரவேற்கத் தக்கது. நாட்டு நலன் கருதிய ஒன்றாகும்.

# ஒரு மாத கால இடைவெளியில்

# எல்சல்வடோரில் மறுபடி பூகம்பம்!

## உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரிப்பு!!

சான்சல்வடோர், பெப்ரவரி 15

மத்திய அமெரிக்க நாடாகிய எல்சல்வடோரை, கடந்த ஒரு மாத காலத்தில் இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் மீண்டும் பலமான பூமியதிர்ச்சி தாக்கியுள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகிறது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி எல்சல்வடோரை 7.7 ரிச்டேர் அளவுள்ள பூமியதிர்ச்சி தாக்கியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகி இருந்தனர்.

அந்தப் பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளும், நிவாரண உதவிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தப் பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து முற்றாக விடுபடுவதற்கு முன்னர் மற்றொரு பூமியதிர்ச்சி நேற்று முன்தினம் தாக்கியுள்ளது.

தலைநகர் சான் சல்வடோரை மையமாகக் கொண்டிருந்த இந்தப் பூமியதிர்ச்சி 6-1 ரிச்டேர் அளவைக் கொண்டிருந்தது.

நாட்டின் கிழக்குப் பகுதியில் மண்சரிவுகளை ஏற்படுத்திய இந்தப் பூமியதிர்ச்சிக்கு நேற்று மாலை வெளியான செய்திகளின் படி 237 பேர் பலியாகி உள்ளனர்.

இந்த எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகிறது.

கட்டட இடிபாடுகளுக்குள் அநேகமானோர் சிக்கியுள்ளதாகக் கருதப்படுவதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இரண்டு பூகம்பங்களாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள எல்சல்வடோருக்குப் பல்வேறு நாடுகள் பொருள்களையும், நிதிஉதவிகளையும் அனுப்பி வருகின்றன.

(ஒ-7)

## சுமாத்ராவில் நில நடுக்கம்

ஜகார்த்தா, பெப். 15

இந்தோனேசியத் தீவான சுமாத்ராவில் நேற்று அதிகாலை நில நடுக்கம் ஏற்பட்டது ரிச்டேர் அளவு கோலில் 5 ஆக இந்த நில நடுக்கம் பதிவாகியிருந்தது.

உயிரிழப்போ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை.

### முதல்வர் கருணாநிதியின் மகனான

## ஸ்டாலின் வருமானத்தை மீறி சொத்துச் சேர்த்ததாக வழக்கு

சென்னை, பெப். 15

தமிழக முதல்வர் கருணாநிதியின் மகனும் சென்னை நகர மேயருமான மு. க. ஸ்டாலின் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்துள்ளதாக நீதிமன்றத்தில் முறைப்பாட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவகாசியைச் சேர்ந்த அ. தி. மு. க. பிரமுகர் சண்முகமூர்த்தி என்பவர் இந்த மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

மேயர் ஸ்டாலின் சென்னை அருகேயுள்ள வேளச்சேரி என்ற இடத்தில் மாளிகை ஒன்றைக் கட்டியிருப்பதாகவும் அவரது மகளின் பெயரில் 5 கோடி ரூபா மதிப்புள்ள சொத்தை ஸ்டாலின் வாங்கியிருப்பதாகவும் —

மனுவில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பது குறித்து நாளை வெள்ளிக்கிழமை நீதிமன்றம் முடிவு செய்ய உள்ளது.

(ஒ-7)

## கர்ப்பத்தை கண்டுபிடிக்க தவறிய மருத்துவருக்குத் தண்டனை!

### சிங்கப்பூர் மருத்துவசபை விதிப்பு

சிங்கப்பூர் சிற்றி, பெப்.15

கர்ப்பத்தைக் கண்டுபிடிக்கத் தவறிய சிங்கப்பூர் மருத்துவர் ஒருவர் மருத்துவத் தொழிலில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது

பல்கிஸ் அக்பர் அலி என்ற பொது மருத்துவரே தண்டனைக்குள்ளானவராவார்.

1999 செப்ரெம்பரில் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவருக்குக் கர்ப்பம் குறித்துச் சிறுநீர் பரிசோதனை செய்த அலி, அந்தப் பெண்ணுக்குக் கர்ப்பம் தரிக்கவில்லை என்று உறுதிப்படுத்தினார்.

ஆனால்பரிசோதனைநடத்தப்பட்டதிலிருந்து5மாதங்கள் கழித்து மலசலகூடத்தினுள் அந்தப் பணிப்பெண் குறைமாத ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்தார்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட சிங்கப்பூர் மருத்துவ கவுன்சில் அதிகாரிகள் மருத்துவத் தொழிலில் கவனக் குறைவாகவும், அலட்சியமாகவும் ஈடுபட்டதுக்காக அக்பர் அலி தொடர்ந்து மருத்துவத் தொழிலில் ஈடுபடத் தடை விதித்துள்ளதுடன், அவருக்கு 5 ஆயிரம் வெள்ளி (2,906 டொலர்கள்) அபராதமும் விதித்துள்ளனர்.

(ஒ-7)

# குருநகர் களஞ்சியத் திருட்டு வழக்கை யாழ். நீதிமன்றில் விசாரிக்கத் தடை!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு

கொழும்பு, பெப். 15

குருநகர் உணவுக்களஞ்சியத் திருட்டு தொடர்பான வழக்கை யாழ். நீதிவான் நீம்மன்றத்தில் விசாரணை செய்வதை நிறுத்தி வைக்கும் படி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் சந்தேக நபரான யாழ். கச்சேரி களஞ்சியப் பொறுப்பாளர் ராஜரட்ணம் கதிர்காமநாதன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணி தயாசெபநாயகத்தின் மூலம் தாக்கல் செய்த மனுவைப் பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ராஜா பெர்னாண்டோ, ஜயவிக்கிரம ஆகியோர் திங்கட்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோருக்கும் இது தொடர்பான அறிவித்தல் அனுப்புமாறும் நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

குருநகர் உணவுக்களஞ்சியத்திருட்டு வழக்கு இம் மாதம் 19 ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதால் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

எதுவித சாட்சிகளுமின்றி, எதுவித முறைப்பாடுகளுமின்றி ஒரு சாட்சியைக்குற்றவாளியாக்கித் தொடர்ந்தும் இந்த வழக்கை விசாரணை செய்வதாக மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் அசாதாரண சூழ்நிலை நிலவிய நேரம் இக்களஞ்சியம் உடைக்கப்பட்டு 49 இலட்சம் ரூபா பெறுமதியான உணவு மற்றும் நிவாரணப் பொருள்கள் திருடப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக 37 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டு 29 - 09 - 2000 அன்று யாழ். நீதிவானால் விடுதலை செய்யப்பட்டனர்.

களஞ்சியப் பொறுப்பாளர் கதிர்காமநாதனை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வருமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது. அவர் தனது சாட்சியத்தில் சில முன்னுக்குப்பின் முரணாகத் தகவல்கள் தந்துள்ளார் என்ற சந்தேகத்தில்நீதிவானால்விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

களஞ்சியப் பொறுப்பாளர் கதிர்காமநாதன் தம்மைப் பிணையில் விடுமாறு கோரி வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை அடுத்து 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையிலும் நவம்பர் 22 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார்.

களஞ்சியப் பொறுப்பாளர் கதிர்காமநாதனின் மனைவி இந்த வழக்குத் தொடர்பாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இந்த வழக்கை யாழ். நீதிமன்றத்தில்இருந்து கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு மாற்றும்படியும் அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தரணி தயா செபநாயகத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணிகள் சாலிய பீரிஸ், உப்புல் குமாரபெரும ஆகியோர் ஆஜரானார்கள்.

மேல் விசாரணை எதிர் வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ஐ)

## கருத்தரங்கில் சொற்பொழிவு

வடமராட்சி கல்வி வலயத்தின் ஆதரவுடன் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் வளநிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

'சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்' எனும் பொருளில் சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் உரையாற்றவுள்ளார். (ஐ-10-ரி)

### உதயவாக்கு

ஆயிரம் பேரிடம் அரைகுறை நட்பு வைத்திருப்பதை விட ஆறு பேரிடம் ஆழ்ந்த நட்பு வைத்திருப்பதே சிறப்பு.

## நாளை

மாசி 4

வெள்ளிக்கிழமை

திதி: நவமி

பின் இரவு 3.30 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

பிற்பகல் 4.36 வரை.

அபநேரம்: 6.33 — 8.03

ராகுகாலம்: 11.03—12.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# 'ஜனஉதாவ' திட்டத்தின் கீழ்
# வலி. மேற்கில் 50 வீடுகள்
## வசதிகுறைந்த மக்களுக்கென நிர்மாணம்

வலி.மேற்கு, பெப். 15 ஜன உதாவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகள் இந்த ஆண்டு அமைக்கப்படவுள்ளன.

ஜன உதாவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இருப்பிட வசதியில்லாமல் இருக்கும் தொல்புரம் கொட்டியாவத்தையைச்சேர்ந்த 25 குடும்பங்களுக்கும், வட்டுக்கோட்டை முதலி கோயிலடியைச்சேர்ந்த 25 குடும்பங்களுக்கும் தலா 35 ஆயிரம் ரூபா நன்கொடையாகவும், 20 ஆயிரம் ரூபா கடனாகவும் வழங்கி வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் வலி காமம் மேற்குப் பிரதேச செயலகமும் மேற்கொண்டுள்ளன.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 ஆயிரம் ரூபாவை நன்கொடையாகவும் 20 ஆயிரம் ரூபாவை கடனாகவும் வழங்கவுள்ளது. வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தினர் வடக்கின் மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் நிதியில் இருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் 25 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கும்.

மாத வருமானம் 1500ரூபாவுக்குட்பட்ட 50 குடும்பங்கள் இந்த வீடமைப்புத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (சு-175)

### பொதுசன உதவி நன்கொடைப்பணம்

நீர்வேலி, பெப். 15

நீர்வேலி உபதபாற்கந்தோரில் 12 ஆம் திகதி முதல் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து இங்கு வசிப்பவர்களுக்கும், இப்பகுதியிலுள்ளவர்களுக்கு பொதுசன உதவி நன்கொடைப்பணம் வழங்கப்பட்டு வருகின்றது. (க-110)

### கண்டிக்குச் சாரணர் குழு செல்லும்

கண்டி பலேகலவில் எதிர்வரும் 22 ஆம் திகதி,தொடக்கம்25 ஆம்திகதி வரை நடைபெறவுள்ள சாரணர் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொள்ள பருத்தித்துறை சாரணர் மாவட்டத்திலிருந்து 15 சாரணர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் கே. செல்வநாயகம் தலைமையிலான சாரணர்குழு ஒன்றுகூடல் நிகழ்வுக்கு செல்லவுள்ளது. [க-117]

### பார்வை குறைபாடு; விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு

பார்வைக்குறைபாடு உடையவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் தொடர்பான நிகழ்வு, எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பார்வைக்குறைபாடு உள்ளோர் பார்வைக்குறைபாடு அற்றவர்களுடன் எவ்வாறு ஒருங்கிணைய முடியும் என்பது பற்றி செயல் முறை விளக்கம் கொடுக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெறலாம் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)


## வெளிவருகின்றது!

மாணவருக்கான இலாப நோக்கமற்ற

**பொது அறிவுச் சஞ்சிகை**

15 ஆவது ''ஆற்றல்'' இதழ் அடுத்த வாரம் வெளிவரும்.

**54 பக்கம் 10/-**

விநியோக ஊக்குவிப்பு தள்ளுபடிகள் பிரதி ஒன்றுக்கு

- முற்பணம் செலுத்தி பெறுவோர்க்கு 2/-
- 10 நாள்களில் அனுப்புவோர்க்கு 1/-

பல மாத பண நிலுவை உள்ளோருக்கு எம்மால் ''ஆற்றல்'' விநியோகிக்க இயலாதுள்ளது.

அஞ்சல் காசுக் கட்டளை விவரம்:

பணம் பெறும் இடம்: சுண்டிக்குளி

பணம் பெறுபவர் பெயர்: ஆற்றல் ஆசிரியர்
76, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(84165)

## வெளிவந்துள்ளது...

வழக்கம்பரை முத்துமாரியம்மன் மேல் பக்தியுடன் மகா வித்துவான் வீரமணி ஐயர் எழுதிய

தொல்புரத்து நாயகி பாடல்கள் ஒலிப்பதிவு நாடா மூலமாக

**தென்னிந்திய இசைக் குயில்கள்**

சாருமதி, சசிரேகா, செந்தாமரை ஆகியோர் பாடி வெளிவந்துள்ளது.

இவற்றைப் பெறவிரும்புவோர் ரூபா 150.00 கொண்ட காசோலை,மணியோடர் அனுப்பியும், நேர்முகமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

என்னுடன் தொடர்பு கொள்ளவும்:

சிவத்திரு. சு. சுந்தரராசக்குருக்கள்
வழக்கம்பரை,
தொல்புரம்-சுழிபுரம்.

(சி/153 6)

## வலி. கிழக்குப் பிரதேச சபையினால்

நடத்தப்படும்

## கணனிப் பயிற்சி

- MS WORD
- MS EXCEL
- ACCESS

04 Months

★ மேற்படி பாட விதானங்கள் எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

★ க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

★ பொது அறிவு, நுண்ணறிவுப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பப்படிவத்தை வலி. கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலகங்களான நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய்,அச்சுவேலி, புத்தூர் ஆகிய அலுவலகங்களில் ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து''தவிசாளர், வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 28-02-2001**

திரு. பூ. குணசிங்கம்
ஜே. பி. யு. எம்.
தவிசாளர்,

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.

13—02—2001

(சி/15305)

## கணக்காளர் வெற்றிடம்

யாழ்ப்பாண நகரில் மொத்த, சில்லறை வியாபார ஸ்தாபனத்துக்கு கணக்குகள் எழுதுவதற்கு நிர்வாகத் திறமையுமுள்ள கணக்காளர் தேவை. வயது நாற்பத்தைந்துக்குக் குறைவாக இருப்பதுடன் விண்ணப்பதாரிக்கு நல்ல குணநலன்களும், பொறுப்புணர்வும் இருப்பது அவசியம்.

தகைமை, குணநலச்சான்றுகளுடன் விண்ணப்பம் செய்க.

விளம்பர இல 1211, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (84176)


## துயர் பகிர்கின்றோம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய சமூகத்தின்

இதய அஞ்சலி

எமது ஆசிரியை

திருமதி லோகாம்பிகை ஸ்ரீகாந்தன்

அவர்களின் அன்புத் தந்தையார்

**செ. இளையதம்பி**

அவர்கள் 16 – 01 – 2001 அன்று சிவபதம் அடைந்தமையினால் துயருறும் அன்னாரது குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவதுடன், அமரரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

(சி/15309)

## பின்னுறுதித்தீர்வை அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

வழக்கு இல. மண நீக்கம்/ 180

பிளிநோவ் றொனால்ட்
பெண் சாந்தப்பிரியா
89, சென். பற்றிக்ஸ் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.
— வழக்காளி

எதிராக,

பிளிநோவ் றொனால்ட்
யோசப் (சின்னா)
சிவன் வீதி, பலாலி றோட்,
உரும்பிராய்.
— எதிராளி

இவ்வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 2000 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவர் சார்பில் அவரின் பதிவு பெற்ற சட்டத்தரணி பொன் பூலோகசிங்கம் அவர்களும் மன்றில் சமுகமாயிருந்தனர். எதிராளிக்கு அழைப்புக்கட்டளை பதில்சேவை மூலம் சேவிக்கப்பட்டு எதிராளி நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமோ நீதிமன்றில் தெரிபடாத காரணத்தால் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் துரட்சி, ஆவணங்கள் மற்றும் வழக்காளியின் சாட்சியம் ஆகியவற்றை மன்று பரிசீலனை செய்து பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

வழக்காளி பிராதின் ''அ'' பந்தியில் கோரிய நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர் எனக் காண்பதுடன், வாக்காளி தனது சாட்சியத்தில் கூறியவாறு வழக்காளியின் பிராதில் ''ஆ'' பந்தியில் உள்ள நிவாரணத்தை வழக்காளி உரிய நேரத்தில் உரிய நீதிமன்றில் கோரிப் பெறக் கூடிய உரிமத்தை வழக்காளி வைத்திருக்கக் கூடியதாக வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1995 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 27 ஆம் நாள் நிறைவேறிய திருமணப்பதிவை இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதும் ஆக்கிக் கட்டளையிட்டு இப் பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகின்றது.

இப் பின்னுறுதித் தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) மாதகாலத்தினுள் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளி இந் நீதிமன்றத்தில் தோன்றி இப் பின்னுறுதித் தீர்வையை ஏன் ஒரு முற்றான தீர்ப்பாணையாக்கக் கூடாது என்த் தகுந்த காரணம் காட்டாவிட்டால் இப்பின்னுறுதித் தீர்ப்பாணை முற்றான தீர்வையாக்கப்படும்.

மன்றின் கட்டளைப்படி.

து. சிறிமோகன்
பதிவாளர்,
யாழ். மாவட்ட நீதிமன்றம்.

தயாரித்தவர்:

பொன். பூலோகசிங்கம்
வழக்காளியின் பதிவு பெற்ற
சட்டத்தரணி. (84166)

# புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்கிறார் ஜெயலலிதா

சென்னை,பெப்.15

விடுதலைப் புலிகள் தொடர்பான அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வின் நிலைப்பாடு மாறவில்லை. நாங்களே புலிகளைத் தடைசெய்ய வற்புறுத்தினோம். எங்கள் நிலையில் நாம் உறுதியாகவுள்ளோம். என்று அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் புலிகள் ஆதரவு நிலைப்பாட்டில் அ.தி.மு.க. கூட்டணியில் சிக்கல் ஏற்படும் என்று கூறப்படுவது குறித்து விளக்கம் அளித்த ஜெயலலிதா இலங்கைத் தமிழர்களின் உரிமைக் காக பா.ம.க. குரல் கொடுக்கிறது. அது அக்கட்சியின் நிலைப்பாடு என்று கூறினார். இதேவேளை கூட்டணியில் பா.ம.க. இருப்பது தொடர்பாக காங் கிரஸ் கட்சி எந்தவித அசௌகரி யமும் கொள்ளத் தேவையில்லை. எமது தேர்தல் வியூகம் தொடர்பாக முடிவெடுப்பதற்கு காங்கிரஸுக்கும் தமிழ் மாநில காங்கிரஸுக்கும் இவ் வாரம் வரை நேரம் கொடுக்கப்பட் டுள்ளது என்றும் ஜெயலலிதா கூறினார்.

### காலக்கெடு விதிக்கவில்லை

நான் திகதி குறித்து காலக்கெடு விதிக்கவில்லை. இந்த வாரத்துக் குள் அவர்கள் முடிவெடுத்தால் வசதியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

1996 தேர்தலில் பா.ம.க.வுடன் தற்போதைய காங்கிரஸின் தமிழ் நாடு பிரிவுத் தலைவர் இளங்கோ வன் தேர்தல் உடன்பாடு கொண்டு இருந்ததையும் பழனி, புதுக்கோட்டை இடைத் தேர்தல்களின்போது பா.ம. க.வின் ஆதரவை காங்கிரஸ் பெற்றுக் கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அதேசமயம் தமிழ் மாநில காங்கிரஸை எமது கூட்டணி யில் சேருமாறு கருணாநிதி அழைப்பு விடுத்தமை தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜெயலலிதா இது கரு ணாநிதியின் விரக்தி நிலையையும் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை யுமே காட்டுகின்றது எனக் கூறினார்.

### கருணாநிதியின் கிண்டல்

இதனிடையில் ஜெயலலிதாவின் மகா கூட்டணியை மகாமகக் கூட் டணி எனத் தமிழக முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான கருணாநிதி கிண்டல் செய்துள்ளார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தவேளை கும்பகோணத்தில் நீராடுவதற்காக ஜெயலலிதாவும் அவ ரின் உயிர்த்தோழி சசிகலாவும் சென்ற சமயம் நெரியுண்டு பலர் பலியான சம்ப வத்தையே மகாமகக் கூட்டணி எனக் கரு ணாநிதி ஏளனம் செய்திருக்கிறார். (க)

# அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதியில் சுமார் நாற்பது வீதம் துஷ்பிரயோகம்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு,பெப்.15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் அபி விருத்தித் திட்டங்களுக்காக ஒதுக் கப்பட்ட நிதியில் 40 சதவீதமானவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக எதிர்பார்த்த அபி விருத்தி இலக்கை அடைய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

பொதுநிர்வாக உள்நாட்டு அலு வல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்த ரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரி வித்தார்.

நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து அரச சேவை அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் திருமதி குமாரதுங்க தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

நாட்டு மக்களின் அபிலாஷை களை அறிந்து அதற்கு முகம் கொடுக்கக்கூடிய விதத்தில் வேலைத் திட்டங்களையும் கொள்கைகளை யும் தயாரித்து வெளியிட வேண்டி யது அரசாங்கத்தின் பொறுப்பாக அமைகிறது. அதன் பின்னர் அதனை ஒழுங்காக நடைமுறைப்படுத்தவேண் டிய கடப்பாடு அரசாங்க சேவையாளர் களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

நாட்டுமக்களை ஏமாற்றவோ, புறக் கணிக்கவோ எமக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. ஏனெனில் நாம் பெறுகின்ற சம்பளம் மற்றும் செலவினங்கள் அனைத்தும் எங்க ளுக்கு அவர்கள் மூலமாகவே கிடைக் கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

### தமிழ்மொழி அமுலாக்கல் சீரில்லை

தமிழ்பேசும் மக்கள் வாழும் பகு திகளில் இன்னமும் தமிழ்மொழி மூலம் நிர்வாகங்கள் சீராக நடப்ப தாகத் தெரியவில்லை.

வடக்கு-கிழக்கு உட்பட தமிழ் பேசும் மக்கள் வாழும் சகல இடங்களிலும் அந்த மக்களின் தேவை கள் தமிழில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களின் உரிமை புறக் கணிக்கப்பட இடமளிக்க முடியாது.

எதிர்காலத்தில் சிங்கள அதிகா ரிகள் தமிழ் கற்றிருந்தால் மட்டுமே பதவி உயர்வுகளில் முன்னுரிமை கொடுக்கப்படும் - என்று ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)



ஆன்மீக நூல்தின நிகழ்வு அண்மையில் நல்லூரில் கோயில் வீதி யில் அமைந்துள்ள சாயிபாபா களஞ்சியத்தில் நடைபெற்றது.

வடபிராந்திய சத்ய சாயி சேவா நிறுவனங்களின் முன்னாள் அமைப் பாளரும் முன்னாள் அரச அதிபருமான எஸ்.சிவஞானம் முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர் வே.பொ.பாலசிங்கத்திடம் இருந்து 'கர்மா' என்னும் நூலைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

பெரும் எண்ணிக்கையான ஆன்மீக நூல்கள் அங்கு கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (ஐ)



தாவடி வடக்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் தையல், மனையியல் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. வலி.தெற்கு பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம் நாடா வெட்டிக் கண்காட்சியை ஆரம் பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பாலசுப்பிரமணியமும், நிர்வாக அதிகாரி ஆர்.ஜெயப்பிரகாசமும் உள்ளனர். (ஐ)

## உயிரியல் ஆசிரியர்களுக்கான செய்முறைப்பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.15

ஜி.சீ.ஈ. உயர்தர உயிரியல் ஆசி ரியர்களுக்கான செய்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூயவிஞ்ஞானப் பிரிவு தாவரவியல், விலங்கியல் துறை களுடன் இணைந்து நடத்தத் தீர்மானித் துள்ளது.

இச் செய்முறைப் பயிற்சி எதிர் வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங் களில் தாவரவியல், விலங்கியல் துறைகளில் நடைபெறும்.

தற்சமயம் நடைமுறையிலுள்ள புதிய உயிரியல் பாடத்திட்டத்தின் சில பகுதிகளைச் செய்முறை மூல மாக ஆசிரியர்களுக்கு விளக்குவதற் காக இப்பயிற்சித்திட்டம் ஒழுங் கமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டத்தில் நுண்ணுயிரியல், உடற் றொழியியல், மீன்பிடி உயிரியல் ஆகிய விடயங்களே சிறப்பாகக் கருத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்செய்முறைப் பயிற்சிக்கு விண்ணப்பித்த உயிரியல் ஆசிரியர் கள் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பல் கலைக்கழக தாவரவியல் துறைக்கு வருகை தருமாறு யாழ்ப்பாண விஞ் ஞானச்சங்க தூயவிஞ்ஞானப் பிரிவு கேட்டுள்ளது. (ஐ)

# வாசகர் திருமுகம்

## நிவாரணம் வழங்குவதற்கு இப்படியும் பின்னடிப்பு

வடமராட்சிப் பகுதியில் உள்ள உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தினர் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களை வழங்குவதில் பின்னடிப்புச் செய்து வருகின்றனர். காரணம் கேட்டால் சாட்டுப்போக்கு சொல்வதும் அல்லாமல் சங்கக் கிளைகளை நேரத்துக்குத் திறக்காமல் இருப்பதை அவதானித்துள்ளோம்.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் இயங்கி வரும் சாவகச்சேரி, கொடிகாமம், பளை, கைதடி ப.நோ.கூ. சங்கக் கடைகளும் வட மராட்சியிலுள்ள நெல்லியடி, கரவெட்டி, பருத்தித்துறைச் சங்கக் கடைகளும் நேரகாலத்துடன் போட்டிபோட்டுக் கொண்டு இடம்பெயர்ந்தோர் நிவாரணங்களை வழங்கிவருகின்றன. இது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். இடம்பெயர்ந்தோர் நிவாரணம் வழங்குவதில் இவர்களிடம் ஊக்கமும் அக்கறையும் காணப்படுகிறது.

இதேநேரம் உடுப்பிட்டிச் சங்கத்தால் கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கு குஞ்சர் கடை, கிளை, நாவலடிக் கிளை 18 ஆகிய இடங்களில் நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

இடம்பெயர்ந்தோர் எவ்வளவு கஷ்டங்களுடன் வாழ்கிறார்கள் வறுமைக்கோட் டின் கீழ் வாழும் இவர்களின் பாடு, பெரும் பாடு! அநேகர் அரைகுறை பட்டி னியுடன் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

வீடிழந்து சொத்துக்களை இழந்து எத்தனையோ துயரத்தின் மத்தியில இடம்பெயர்ந்து இங்கு வந்திருப்பவர்களுக்கு ஆறுதலாக ஒருவேளை உணவா வது உண்டு பசி ஆறட்டும் என்றே நிவாரணம் வழங்கப்படுகிறது.

ஆனால் இதனைமறந்து உடுப்பிட்டிச் சங்கத்தினர் வேண்டுமென்று அன்று முதல் நிவாரணம் வழங்குவதில் இழுத்தடிப்பும் பின்னடிப்பும் செய்து வருகிறார்கள்.

கேட்டால் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

அதுமட்டுமல்ல 18ஆம் இலக்கக் கிளையினர் நிவாரணம் எந்தத்திகதி வழங் கப்படும் என்று அறிவிப்புப் பலகையில் அறிவிக்காமல் தாம் நினைத்தபடி திடீரென நிவாரணத்தை வழங்குகிறார்கள்.

குறிப்பிட்ட அந்தநாளில் தான் நிவாரணம் பெற வேண்டும். பின்னர் நிவா ரணம் கிடைக்காது என்றும் சட்டம் கதைக்கிறார்கள்.

அதேநேரம் கடை ஒழுங்காகத் திறப்பதும் இல்லை. நினைத்த நேரம் திறப்பார்கள்; பூட்டுவார்கள்.

கூலி வேலை செய்து அரைவயிற்றுக் கஞ்சியைக் குடிக்கும் ஏழைகள் இந்த நிவாரணத்திற்காக தன் அன்றாட கூலி உழைப்பையும் இழந்து நிவார ணத்தையும் பெற முடியாதுள்ளனர்.

உடுப்பிட்டிச் சங்கத்தினருக்கு ஓர் ஏழையின் நிலைமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இலாபத்தை மட்டுமே கருத்திற்கொண்டு செயற்படுகிறார்கள்.

இதனைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*கைதடி, நாவற்குழி.*

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்
அ.கந்தசாமி

## ஒட்சிசன் இன்மையால் நிகழும் மரணங்களுக்கு யார் பொறுப்பு?

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடாக இருக்கின்ற வேளைகளிலே, கூடுதலாக வெளி நோயாளர் பிரிவில் அநேகர் வைத்தியரின் பற்றுச்சீட்டுடன் வெளி மருந்தகங்களில் பணம் கொடுத்து மருந்துகள் பெறுவது அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இது இப்படியிருக்க, கடந்த 11ஆம் திகதி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் **(I.C.U.)** 38 நாள் ஆண்குழந்தை ஒன்றும், 68 வயது நிரம்பிய பெண்ணொருவரும இறந்துள்ளார்கள்.

இவர்களுக்கு அவசர சிகிச்சையாகப் பாவிக்கப்படவேண்டிய ஒட்சிசன் அவ வேளையில் அங்கு கையிருப்பில் இருக்கவில்லை என்றும் ஒட்சிசன் 3 நாள் களுக்கு முன்பதாகவே முடிந்துவிட்டது என்றும் இச் சிகிச்சைப் பிரிவில் கடமை யாற்றிய வைத்தியர் மிகவும் கவலையோடு கூறினார்.

அடுத்த கப்பலுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலை....!

ஏனென்றால் நோயாளர் கப்பலில் கொண்டுவரப்படும் அத்தியாவசிய மருந் துப் பொருள், கடைசி இரண்டு சேவைகளிலும் எடுத்துவரப்படவில்லை என்பதை உறுதிசெய்யக்கூடியதாக உள்ளது.

அப்படியாயின், இம் மருந்துப் பொருள்களை அனுப்புவதில் சுகாதார அமைச்சு அக்கறையின்றி இருக்கிறதா? அல்லது கொழும்பிலிருந்து மருந்துப் பொருள் களை அனுப்பும் அதிகாரிகள் அசட்டையாக இருக்கின்றார்களா?

எது எவ்வாறாயினும் ஒட்சிசன் இல்லாமல் இருவர் உயிரிழக்க நேரிட்டது சாதாரண விடயமல்ல....!

இதற்கு யார் பொறுப்பு?

*புனித வேளாங்கண்ணி ஆலயம்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

செ.அன்புராசா
(ஆன்மகுரு)

## நிரப்பப்படாத சமுர்த்தி நியமனங்கள்

சமுர்த்தி நியமனங்கள் தென்பகுதியில் முற்று முழுதாக நிரப்பப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் சமுர்த்தித் திட்டம் செயற்பட்டு வருவதை யாவரும் அறிவர். அதன் படி பல வருடங்களின் பின்பே வடபகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சமுர்த்தி நியமனங்கள் வழங்கப்பட்டு தத்தம் பிரதேச செயலர் பிரிவுகளில் அவர்கள் கடமையாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தும் இத்திட்டம் மக்கள் மத்தியில் செயல் உருப்பெறவில்லை. அத்துடன் அந்நேரம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இத்திட்டம் தொடர்பான பூரண அறிவு இல்லாமல் இருந்தது எனலாம்.

இந்நிலையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமும் அமைச் சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந் திரன் (ஜெகன்) ஆகியோரின் பெரும் முயற்சியாலும் சமுர்த்தி நியமனங்கள் யாழ்.மாவட்டத்தில் பெருமளவில் நிரப்பப்பட்டதை யாவரும் அறிவர்.

எனினும் சமுர்த்தி தமிழ் / ஆங்கில தட்டெழுத்தாளர், சமுர்த்தி அலுவலக உதவியாளர், சமுர்த்தி பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் இதுவரை வடக்கில் அதுவும் யாழ்.மாவட்டத்தில் இன்னும் நிரப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

மேற்குறிப்பிட்ட சமுர்த்தி நியமனங்கள் கடந்த தேர்தல் பிரசார காலத்தின் போது சுடச்சுட வழங்கப்பட்டன. ஆனால் மேற்குறிப்பிட்ட மூன்று பதவி வெற்றிடங்களும் நிரப்பத் தவறியமைக்குரிய காரணங்கள் ஏன் என்று தெரிய வில்லை. மற்றும் சமுர்த்தி நியமனம் கிடைத்த சிலர் வேறு வேலை கிடைத் தமையினாலும் வெளிநாடுகளுக்குச் சென்றமையினாலும் தமது பதவிகளை இரத்துச் செய்துள்ளனர். எனவே இவர்களது வெற்றிடங்களும் இன்னும் நிரப்பட வில்லை.

கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பும் பின்பும் வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ்.காரியாலயத்தில் வேலை வாய்ப்புகளுக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் தகுதியானவர்களைக் கொண்டு மேற் குறிப்பிட்ட எஞ்சியுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை பாதிக்கப்பட்டவர்களின் சார்பிலும் எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களினது சார்பிலும் தயவாகக் கேட்டு நிற்கிறேன்.

*யாழ்ப்பாணம்.*

என்.ஜெசா

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு இம் மாதம் 13ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### சங்கானை

(178737ஏ) (178737பி) (181636ஏ)
(181636பி) ·(182588ஏ) (182718ஏ)
(182718பி)

### சாவகச்சேரி

(160013ஏ) (160013பி) (180433ஏ)
(180433பி) (180433சி) (180565ஏ)
(180565பி)

### யாழ்ப்பாணம்

(175585ஏ) (178395ஏ) (178395பி)
(178431ஏ) (178485ஏ) (180010ஏ)
(180010பி) (180010சி) (180109ஏ)
(180187ஏ) (180187பி) (180187சி)
(181702ஏ) (181907ஏ) (181940ஏ)
(181941ஏ) (181942ஏ) (181965ஏ)
(181969ஏ) (181969பி) (182003ஏ)
(182038ஏ) (182112ஏ) (182112பி)
(182112சி) (182112டி) (182112ஈ)
(182112எப்) (182138ஏ) (182138பி)
(182138சி) (182178ஏ) (182178பி)
(182178சி) (182194ஏ) (182194பி)
(182194சி)

### கரவெட்டி

(155841ஏ) (158020ஏ) (158020பி)
(158020சி) (158020டி) (158020ஈ)
(162340ஏ) (164493ஏ) (164493பி)
(164493சி) (165332ஏ) (165332பி)
(169572ஏ) (169572பி) (169572சி)
(169572டி) (169572ஈ) (169657ஏ)
(169657பி) (169749ஏ) (169749பி)
(172407ஏ) (172407பி) (172574ஏ)
(172574பி) (172574சி) (172598ஏ)
(172598பி) (174328ஏ) (174328பி)
(174328சி) (176218ஏ) (176223ஏ)
(176223பி) (176223சி) (176270ஏ)
(176270பி) (176270சி) (176328ஏ)
(176328பி) (176499ஏ) (176499பி)
(177642ஏ) (177732ஏ) (177738ஏ)
(177738பி) (177759ஏ) (177759பி)
(177759சி) (177869ஏ) (177869பி)
(177869சி) (177901ஏ) (177901பி)
(177901சி) (177903ஏ) (177968ஏ)
(177968பி) (177968சி) (177968டி)
(177968ஈ) (177968எப்) (177968ஜி)
(180393ஏ) (180393பி) (180441ஏ)
(180441பி) (180441சி) (180441டி)
(180441ஈ) (180454ஏ) (180457ஏ)
(180471ஏ) (180471பி) (180515ஏ)
(180515பி) (180530ஏ) (180531ஏ)
(180531பி) (180550ஏ) (180550பி)
(180550சி) (180554ஏ) (180575ஏ)
(180578ஏ) (181074ஏ) (181075ஏ)
(181075பி) (181075சி) (181094ஏ)
(181176ஏ) (181177ஏ) (181177பி)
(181223ஏ) (181250ஏ) (181250பி)
(181256ஏ) (181256பி) (181280ஏ)
(181300ஏ) (181329ஏ) (181329பி)
(181336ஏ) (181346ஏ) (181394ஏ)
(181394பி) (181398ஏ) (182210ஏ)
(182222ஏ) (182224ஏ) (182224பி)
(182224சி) (182224டி) (182227ஏ)
(182227பி) (182229ஏ) (182283ஏ)
(182283பி) (182296ஏ) (182297ஏ)
(182298ஏ) (182325ஏ) (182378ஏ)
(182477ஏ) (182477பி) (182477சி)

### நல்லூர்

(181708ஏ) (181709ஏ) (181901ஏ)
(174989ஏ) (179243ஏ) (179243பி)
(179328ஏ) (181661ஏ) (181661பி)
(181661சி) (181687ஏ) (182717ஏ)

### பலாலி

(180438பி)

### பருத்தித்துறை

(146044ஏ) (146044பி) (151007ஏ)
(154780ஏ) (154780பி) (154780சி)
(165038ஏ) (167930ஏ) (167930பி)
(167960ஏ) (167994ஏ) (169891ஏ)
(169916ஏ) (176268ஏ) (176278ஏ)
(176507ஏ) (176507பி) (176507சி)
(177842ஏ) (177842பி) (177896ஏ)
(177896பி) (177931ஏ) (177931பி)
(177931சி) (177967ஏ) (177967சி)
(177967டி) (177967ஈ) (177977பி)
(177983ஏ) (177983பி) (180377ஏ)
(180438ஏ) (180444ஏ) (180444பி)
(180464ஏ) (180478ஏ) (180478பி)
(180478சி) (180545ஏ) (180545பி)
(180556ஏ) (180556பி) (180556சி)
(180556டி) (180582ஏ) (180582பி)
(180582சி) (181057ஏ) (181057பி)
(181078ஏ) (181078பி) (181096ஏ)
(181096பி) (181096சி) (181130ஏ)
(181147ஏ) (181157ஏ) (181157பி)
(181165ஏ) (181192ஏ) (181192ஏ)
(181192பி) (181192சி) (181192டி)
(181192ஈ) (181347ஏ) (181396ஏ)
(181396பி) (181396சி) (182236ஏ)
(182237ஏ) (182237பி) (18237சி)
(182265ஏ) (182292ஏ) (182293ஏ)
(182294ஏ) (182295ஏ) (182299ஏ)
(182300ஏ) (182301ஏ) (182302ஏ)
(182303ஏ) (182305ஏ) (182305பி)
(182306ஏ) (182306பி) (182306சி)
(182306டி) (182306ஈ) (182313ஏ)
(182340ஏ) (182364ஏ) (182407ஏ)
(182407பி) (182407சி) (182455ஏ)
(182458ஏ) (182489ஏ) (182489பி)

### சண்டிலிப்பாய்

(155133ஏ) (161538ஏ) (176880ஏ)
(178985ஏ) (181471ஏ) (181471பி)
(181647ஏ) (181647பி) (181647சி)
(181647டி) (181648ஏ)

### உடுவில்

(181929ஏ) (178816ஏ) (179359ஏ)
(181473ஏ) (181534ஏ) (182850ஏ)
(182850பி) (182850சி) (183056ஏ)

வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தோரில் இம் மாதம் 14ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### சங்கானை

(169056ஏ) (169056பி) (174785ஏ)
(174785பி) (178670ஏ) (178670பி)
(178670சி) (178897ஏ) (179089ஏ)
(179166ஏ) (179257ஏ) (179336ஏ)
(179448ஏ) (179508ஏ) (181440ஏ)
(181440ஏ) (181464ஏ) (181513ஏ)

### யாழ்ப்பாணம்

(118430ஏ) (168447ஏ) (173505ஏ)
(173505பி) (175277ஏ) (175277பி)
(178023ஏ) (178024ஏ) (178024பி)
(178042ஏ) (178051ஏ) (178246ஏ)
(178246பி) (178246சி) (178246டி)
(178270ஏ) (178270பி) (178270சி)
(178270டி) (178270ஈ) (178461ஏ)
(178461பி) (178498ஏ) (178498பி)
(179849ஏ) (179873ஏ) (179873பி)
(179873சி) (179873டி) (179873ஈ)
(179907ஏ) (179981ஏ) (179981பி)
(179992ஏ) (180003ஏ) (180003பி)
(180003சி) (180003டி) (180038ஏ)
(180045ஏ) (180045பி) (180045சி)
(180128ஏ) (180128பி) (180128சி)
(180143ஏ) (180163ஏ) (180164ஏ)
(180172ஏ) (180186ஏ) (180231ஏ)
(180231பி) (180231சி) (180249ஏ)
(180249பி) (180253ஏ) (180253பி)
(180253டி) (180257ஏ) (180257பி)
(180267ஏ) (180267பி) (180272ஏ)
(180276ஏ) (180276பி) (180276சி)
(180278ஏ) (180278பி) (180278சி)
(180779ஏ) (180779பி) (180779சி)
(181746ஏ) (181796ஏ) (181921ஏ)
(181921பி) (181922ஏ) (181922பி)
(181932ஏ) (181932பி) (181953ஏ)
(181953பி) (181953சி) (181953டி)
(181964ஏ) (181964பி) (181964சி)
(181964டி) (181991ஏ) (182002ஏ)
(182031ஏ) (182068ஏ) (182068பி)
(182068சி) (182070ஏ) (182091ஏ)
(182091பி) (182091சி) (182119ஏ)
(182158ஏ) (182166ஏ) (182166பி)
(182185ஏ) (182191ஏ) (182192ஏ)
(182713ஏ)

### மருதங்கேணி

(181587ஏ)

### நல்லூர்

(168524ஏ) (168524பி) (168524சி)
(168524டி) (168524ஈ) (168524எப்)
(168524ஜி) (171763ஏ) (175632ஏ)
(175632பி) (175632சி) (175632டி)
(178301ஏ) (178511ஏ) (179906ஏ)
(179906பி) (179906சி) (179906டி)
(179970ஏ) (180057ஏ) (180057பி)
(180147ஏ) (180147பி) (180150ஏ)
(180150பி) (180150சி) (180150டி)
(180184ஏ) (180184பி) (180261ஏ)
(180261பி) (180293ஏ) (180293பி)
(180293சி) (181001பி) (181001சி)
(181703ஏ) (181809ஏ) (181810ஏ)
(181841ஏ) (181841பி) (181931ஏ)
(181931பி) (181931சி) (181931டி)
(181954ஏ) (181954பி) (182001ஏ)
(182004ஏ) (182004பி) (182004சி)
(182022ஏ) (182033ஏ) (182033பி)
(182066ஏ) (182066பி) (182066சி)
(182072ஏ) (182072பி) (182072சி)
(182072டி) (182098ஏ) (182106ஏ)
(182106பி) (182106சி) (182141ஏ)
(182141பி) (182142ஏ) (182147ஏ)
(182182ஏ) (182196ஏ) (178523ஏ)
(178523பி) (178823ஏ) (178823பி)
(179146ஏ) (179146பி) (179386ஏ)
(179386பி) (179453ஏ) (179453பி)
(179453சி) (181441ஏ) (181527ஏ)
(181619ஏ) (181662ஏ) (182626ஏ)
(182632ஏ) (182633ஏ) (182647ஏ)
(182675ஏ) (182675பி) (182675சி)
(182675டி) (182816ஏ) (182816பி)

### சண்டிலிப்பாய்

(170301ஏ) (175792ஏ) (175792பி)
(175792சி) (175792டி) (175861ஏ)
(178818ஏ) (178818பி) (178863ஏ)
(178863பி) (178872ஏ) (178873ஏ)
(178875ஏ) (179011ஏ) (179011பி)
(179011சி) (179063ஏ) (179180ஏ)
(179203ஏ) (179215ஏ) (179215பி)
(179216ஏ) (179216பி) (179342ஏ)
(179408ஏ) (179411ஏ) (179431ஏ)
(179431பி) (179431சி) (179437ஏ)
(179437பி) (179438ஏ) (179438பி)
(181426ஏ) (181426பி) (181426சி)
(181533ஏ) (181546ஏ) (181565ஏ)
(181565பி) (181565சி) (181565டி)
(181570ஏ) (181630ஏ) (181630பி)
(181631ஏ) (181631பி) (181631சி)
(181682ஏ) (181693ஏ) (181693பி)
(181693சி) (182602ஏ) (182651ஏ)
(182651பி) (182660ஏ)

### தெல்லிப்பழை

(150372ஏ) (150372பி) (179208ஏ)
(181462ஏ) (181552ஏ) (181554ஏ)
(181555ஏ) (181684ஏ) (181684பி)
(182622ஏ) (182708ஏ) (182708பி)

### உடுவில்

(165623ஏ) (165624பி) (165624சி)
(170242ஏ) (170242பி) (179406ஏ)
(179406பி) (179499ஏ) (179506ஏ)
(179512ஏ) (179512பி) (181524ஏ)
(181526ஏ) (181530ஏ) (181530பி)
(181530சி) (181545ஏ) (181594ஏ)
(181594பி) (181620ஏ) (182590ஏ)
(182598ஏ) (182613ஏ) (182613பி)

(க-10)


## விற்பனைக்கு

Canon NP 1215 போட்டோ கொப்பி பிரதி இயந்திரம், Fuji ஏ3 அடையாள அட்டை கவரிடுதல் இயந்திரம், கனன் இயந்திர உதிரிப் பாகங்கள், Toner Sharp Toner பெற்றுக் கொள்ளலாம்.

மூர்த்தி, குமரன் விடுதி,
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(84152)



# JAFFNA COLLEGE

**INTER HOUSE**

**ATHLETIC MEET 2001**

***Will be held on***
***Friday 16th February***
**at**
**2.30p.m. at the**
**BICKNELL STADIUM**

Chief Guests:
**Mr.T.ARUNAKIRIRAJAH**
(Asst.Director of Education,- Physical Education, Jaffna Zone)
and
**Mrs.S.ARUNAKIRIRAJAH**

*You Are Cordially Invited*

**Rev.A.A.Paul**
Principal

(ி 15290)


# களுத்துறையில் தமிழ்க் கைதிகள் மருத்துவ வசதிகளின்றி அவதி

கொழும்பு,பெப்.15

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மருத்துவ வசதிகளும், உதவிகளும் இன்றி மிகவும் கஷ்டப்படுவதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நலன் குறித்து நேரடியாகப் பார்வையிடச் சென்ற அதிகாரிகளுள் ஒருவரான எஸ்.சிறிதரன் இது தொடர்பாக தெரிவித்திருப்பதாவது:-

களுத்துறை சிறைச்சாலையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வைத்துக் கைது செய்யப்பட்ட 528 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 425 பேர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 34 பேர் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையிலும், 4 பேர் தடுப்புக்காவலின் பேரிலும், 63 பேர் சாதாரண சட்டத்தின் கீழும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இருவர் விடுதலை கோரி நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யப்பட்ட நிலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இக் கைதிகள் சுகாதார வசதிகள் இன்றி மிகவும் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கான உதவிகளை வழங்க எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை என்று தெரிவித்தார். திருகோணமலையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## இந்து மகா சங்கம்

வலி.தென்மேற்கு-மானிப்பாய் பிரதேச சபை விரைவில் இந்து மகா சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் எடுத்துள்ளார்.

இதுகுறித்து கலந்துரையாடுவதற்காக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 146 கோயில்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-185)


## சுகவாழ்வு நிலையத்தினால் நடத்தப்படும் சிறுகதைப் போட்டி

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு, சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

**போட்டிக்கான நிபந்தனைகள் :-**

01. இலங்கைப் பிரஜைகள் யாவரும் பங்குபற்றலாம்.
02. பெண்ணியம் தொடர்பான கருப்பொருளை மையமாகக் கொண்டு சிறுகதை எழுதப்படல் வேண்டும்.
03. எழுதுபவரின் பெயர், முகவரி தனியான ஒரு தாளில் எழுதி இணைக்கப்படல் வேண்டும்.
04. சிறுகதை 10 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் விரும்பத்தக்கது.
05. கதைகள் அனைத்தும் 01-03-2001 க்கு முன்னர் பின்வரும் முகவரியை வந்தடைதல் வேண்டும்.
"சுகவாழ்வு நிலையம்"
514/1, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்,
இலங்கை.
06. **01 ஆம் பரிசு 3,000/-**
**02 ஆம் பரிசு 2,000/-**
**03 ஆம் பரிசு 1,000/-**
* மேலும் 5 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.
07. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

- பணிப்பாளர்

(84150)



அமரர்
## பொன்னையா வேலாயுதம் B.Sc.
(வெக்ரர்)
கணிதப் பேராசான் அவர்களின்
# முதல் ஆண்டு நினைவுதினம்

அன்புடையீர்!

மேற்படி வைபவம் நிகழும் 17-02-2001 சனிக்கிழமை அன்று மு.ப 11 மணிக்கு உடுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகர வீரபத்திரர் ஆலய செல்வி தங்கபூபதி ஞாபகார்த்த அன்னதான மண்டபத்தில் நிகழவிருப்பதால், அவ்வமயம் நடைபெறவிருக்கும் நினைவுவிழாவிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வணக்கம்.

**மனைவி,**
**பிள்ளைகள்.**

*வேலாயுத பவனம்,*
*உடுப்பிட்டி.*

(84139)



## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் சிவலிங்கம்

ஒஸ்கா வீதி, உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தலவாக்கொல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சிவலிங்கம் அவர்கள் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம், அம்மாக்குட்டி ஆகியோரின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், நந்தன் (பிரான்ஸ்) காணீனன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தலவாக்கொல்லையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
செல்வி சி.அருணோதயம்
(உறவினர்) (84153)

*ஒஸ்காவீதி,*
*உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.*



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட தையல் மனையியல், கைப்பணிப் பொருள்களின் கண்காட்சி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

கண்காட்சிக்குத் தலைமை வகித்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உதவியாளர் கு.பாலகிருஷ்ணன், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.செல்வரத்தினம் ஆகியோர் அருகில் அமர்ந்திருக்கின்றனர்.

*(படம்:சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

### முடிவு திகதி கடந்துவிட்ட போதிலும்

# பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதியைப் பெற்றுள்ள யாழ்.மாவட்ட மாணவர்கள், விண்ணப்பத் திகதி முடிவடைந்த போதும் முதலாவது விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைத்தால் அதனை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும்.

இவ்வாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் 'உதயனுக்கு'த் தெரிவித்தார் -

குடாநாட்டில் முதலாவது விண்ணப்பப் படிவத்தை விநியோகிப்பதற்கான விநியோக முகவராக தனியார் நிறுவனம் ஒன்றே செயற்பட்டு வருகிறது.

தற்போது அவர்களிடமும் முதலாவது விண்ணப்பப் படிவம் முடிவடைந்துள்ளதால் அடிப்படைத் தகுதி பெற்ற மாணவர்கள் பலர் இதுவரை முதலாவது விண்ணப்பப் படிவத்தை அனுப்பிவைக்கவில்லை என்றும் -

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முடிவுத் திகதியை நீடிப்பதற்கும் முதலாவது விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட மாணவர்கள் பல தடவை கோரிக்கை விடுத்திருந்தனர்.

மாணவர்களது இக்கட்டான சூழ்நிலையை உரிய அதிகாரியிடம் எடுத்துக் கூறியபோது இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டுக்குத் தற்போது போதிய போக்குவரத்து வசதிகள் இல்லை, தபால் சேவையும் சீரில்லை. இவை அனைத்தும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் தெரியும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு காலம் தாழ்த்தும் மாணவர்களால் விண்ணப்பிக்கப்படும் முதலாவது விண்ணப்பப் படிவத்தையும் ஏற்றுக் கொள்வார்கள்.

அவ்வாறு ஏற்றுக்கொள்ளாது அவர்கள் நிராகரித்தால் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவற்றை அங்கீகரிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் உதவும். எனவே மாணவர்கள் எவரும் இது தொடர்பாக பதற்றமுறத் தேவையில்லை. எமது நாட்டின் சூழ்நிலை காரணமாக உடனடியாக முதலாவது விண்ணப்பப் படிவத்தைப் பெற முடியாது என்பதும் வெளிப்படை.

இதனால் நீங்கள் கொழும்பில் இருந்து தபால் மூலமாகவோ அல்லது உறவினர் மூலமாகவோ முதலாவது விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு விண்ணப்பிக்கலாம். வெட்டுப் புள்ளிகள் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாகும் மாணவர்களில் எந்தவொரு மாணவரும் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதே எனது விருப்பம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை -

அடுத்த வருடத்தில் இருந்து முதலாவது விண்ணப்பப் படிவத்தை விநியோகிக்கும் முகவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் அல்லது யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமே படிவத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கும் என்று யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-6)

### யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம்

# நாளாந்தம் 2 ஆயிரம் லீற்றர் பால்; பதினெட்டு நிலையங்களில் விற்பனை

### *1995 ஆம் ஆண்டின் நிலையை எட்டி விட்டதாகத் தகவல்*

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.மாவட்டத்தில் நாளாந்தம் 2 ஆயிரம் லீற்றர் பால் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினால கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கொள்வனவு செய்யும் பாலை கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினர் மாவட்டத்தில் உள்ள 18 நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருவதுடன்-

யோகட், ஐஸ்கிறீம், பட்டர், மில்க்ஜெலி, நெய், ஆடை நீக்கிய பால் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக சங்க உத்தியோகத்தர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

பால் உற்பத்தியில் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்பிருந்த நிலையை அண்மித்துவிட்டோம். தற்பொழுது ஐ.நா.அபிவிருத்தித் திட்ட உதவியுடன் கோழித்தீன் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

இந்தக் கோழித்தீனுக்கு கோழிப் பண்ணையாளர்கள் மத்தியில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதேவேளை மாட்டுத்தீனும் எமது சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படுகிறது.

எமது உற்பத்திகளுக்கு மக்கள் மத்தியில் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்பும் ஆதரவும் மேலும் புதிய பல பொருள்களை உற்பத்தி செய்வதற்கு உந்து சக்தியாக அமையும்.

கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தில் 2 ஆயிரத்து 45 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் சுழற்சி முறை கடன் திட்டம் ஒன்றையும் எமது அங்கத்தவர் மத்தியில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்றும் அவர் கூறினார். (க-5-ரி)

### விற்பனை நிலையம் திறப்பு

வலி.தெற்கு,பெப்.15

மானிப்பாய் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட விற்பனை நிலையம் ஒன்று இம்மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் வடக்கு, இராசகாரியர் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சட்டத்தரணி இரா.வசந்தசேனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

மானிப்பாய் வர்த்தக சங்கத் தலைவர் ப.சிவகுமார், மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் சிதம்பரநடராசா, மானிப்பாய் ப.நோ.கூ. சங்க உப தலைவர் க.செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஐ-152)

# புலிகள் அமைப்பை பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்க!

### சிஹல உறுமய ஐரோப்பிய நாடுகளைக் கோரும்

கொழும்பு,பெப்.15

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளும் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்று சிஹலஉறுமய கோரிக்கை விடுக்கும்.

அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்கா ரணவக்க இதைத் தெரிவித்தார்.

கட்சியின் உறுப்பினர்கள் எதிர் வரும் ஜுன் மாதம் பாரிஸில் கூடவிருப்பதாகவும் -

அச்சமயமே இந்தக் கோரிக்கை சகல நாடுகளிடமும் விடுக்கப்பட விருப்பதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு கோரி சேகரித்துவரும் பத்து லட்சம் பேரின் கையொப்பத்துடன் மகஜர் ஒன்றை விரைவில் பிரிட்டிஷ் பிரதமரிடம் நேரடியாகத் தாம் கையளிக்கவிருப்பதாகவும் அவர் கூறினார். (க-3)

# திக்கம் சாராய வடிசாலை செயற்பாடுகள் திடீர் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.15

திக்கம் சாராய வடிசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் கால வரையறையின்றி நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வடிசாலையின் செயற்பாடு அதிருப்தி அடைந்திருப்பதாகக் கூறப்பட்டு, கடந்த மாதம் பனை அபிவிருத்திச்சபையினால் வடிசாலை பொறுப்பேற்கப்பட்டது.

வடிசாலை செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் ஓய்வு பெற்ற கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவர் இந்த வடிசாலையின் பொது முகாமையாளராக நியமனம் செய்யப்பட்டார்.

இந்த வடிசாலை கைமாறப்பட்டது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைக்கும் வடிசாலையை ஏற்கனவே நிர்வகித்து வந்த வடமராட்சி பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க-5)

# உடுவிலில் இரு பாடசாலைகளில் ஓடு பிரித்துப் பொருள்கள் திருட்டு!

வலி.தெற்கு,பெப்.15

உடுவில் பகுதியில் மீண்டும் கள்வரின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் இப் பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகளின் ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் போன்ற பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக அதன் அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்திலும் பெறுமதியான பொருள்கள் களவு போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-152)

### மாகியப்பிட்டிச் சந்திக்கு அருகிலுள்ள

# மதகைத் திருத்தும் பணிகள் சில தினங்களில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,பெப்.15

சங்கானை - வல்லை வீதியில் மாகியப்பிட்டிச் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் சேதம் அடைந்துள்ள மதகைத் திருத்தும் பணி ஓரிரு தினங்களில் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் கே.சிறிநிவாசன் தெரிவித்தார்.

இந்த மதகினைப் புனரமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்றும் அவர் சொன்னார்.


இந்த மதகு இடிந்து விழும் நிலையில் இருப்பதாக உதயனில் கடந்த 5 ஆம் திகதி வெளியான செய்தி தொடர்பாகவே இந்த விடயத்தை அவர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (க-3)

### சந்நிதியில் நாளை சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப்.15

தொண்டமானாறு, செல்வச்சந்நிதி ஆலயத்தின் சங்காபிஷேகமும் சண்முக அர்ச்சனையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-10)

# சாயி சிந்தனை



அன்பின் வடிவங்களே!

அன்பிலேயே இருங்கள். உங்கள் ஆசைகள் எல்லாம் நிறைவேறும். யாரையும் வெறுக்காதீர்கள்.

அன்பு முழுதும் நிறைந்த நெஞ்சத்துடன் அன்பின் ஆனந்தத்தை அனுபவியுங்கள்.

இந்தச் செய்திதான் பகவான் உங்களுக்கு இன்று அளிக்கும் அன்புச் செய்தி!

உங்களுக்கெல்லாம் நிலையான பக்தியுடன் கூடிய, ஆன்மீகம் நிறைந்த, நீண்ட மகிழ்ச்சியான வாழ்க்கை அமைய வாழ்த்துகிறேன்.

உங்கள் கஷ்டங்கள், துயரங்கள் எல்லாம் விலகட்டும்.

ஏதாவது துன்பம் உருவானாலும் அவையெல்லாம் பற்றி நினைத்து உங்கள் மனோசக்தியை வீணாக்காமல் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு, சிறிதும் கலப்பற்ற ஆனந்தத்தையும், மகிழ்ச்சியையும் நீங்கள் அனுபவித்து மகிழுங்கள் என ஆசி கூறுகிறேன்.

ஜெய்ஸாயிராம்!

**(23.11.2000 அன்று பகவான் ஆற்றிய 75ஆவது பிறந்தநாள் அருளுரையிலிருந்து)**

### கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ். நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலாளர் அ.இரவீந்திரதாசன் தலைமையில் நடைபெறும். (ஐ-10)

### மாநகர சபைக்கு 2 டிராக்டர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.15

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் யாழ். மாநகரசபைக்கு 2 டிராக்டர்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

'கிரிந்த' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள இந்த டிராக்டர்கள் ஒரு சில தினங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று மாநகரசபையின் ஆணையாளர் இ.தணிகாசலம் தெரிவித்தார். (க-10)

### ஏழாலை மாணவர்கள் இருவருக்கு பதக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.15

புத்தாயிரம் ஆண்டின் 29 ஆவது சர்வதேச சிறுவர் ஓவியக் கண்காட்சிப் போட்டியில் கலந்து கொண்ட ஏழாலை மகா வித்தியாலய மாணவர்களில் இருவர் பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

கருணாமூர்த்தி அன்பழகன், தில்லைநடராசா கிசாந் ஆகியோரே பதக்கம் பெற்றவர்கள் ஆவர்.

இவர்களுடன் தமிழ்மொழிக் கட்டுரைப் போட்டியில் செல்வி சோபனா கதிரமலை என்ற மாணவி அகில இலங்கை ரீதியாக கனிஷ்ட பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (க-10)

### சாயி நிலையத்தில் சிவராத்திரியன்று விசேட நிகழ்ச்சி

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சிவராத்திரி தினமான எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பாதபூஜை, சிவநாம பஜனை என்பன இடம்பெறும்.

'சிவராத்திரி மகிமை' என்னும் தலைப்பில் இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் உரையாற்றுவார். (ஐ)

### 398 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடுகள் சேதமடைந்தோருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு 25ஆயிரம் ரூபாவின் முதற்கட்டக் கொடுப்பனவான 10ஆயிரம் ரூபா மேலும் 398 குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

காரைநகர் பகுதியில் 208 குடும்பங்களுக்கும் ஊர்காவற்றுறைப் பகுதியில் 190 குடும்பங்களுக்கும் வழங்கப்பட உள்ள கொடுப்பனவுக்கான காசோலைகள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

கொடுப்பனவுகளைப் பெற உள்ளோர் கிராம சேவையாளர்களிடம் உறுதிப்படுத்திய பின் வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்துள்ளார். (க-73)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆங்கிலம்

ஆண்டு 6 முதல் G.C.E A/L வரையிலான வகுப்புகள் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரினால் ஆங்கிலம் பிரத்தியேகமாக (PERSONAL) கற்பிக்கப்படும். தொடர்பு: இல.5, இராமநாதன் வீதி, நாச்சிமார்கோயிலடி, சலூன் முன்பாக. (84137)

### அபூர்வ ஜோதிடம்

கேரள சித்த வைத்திய முறையில் தீராத நோய்கள், அற்புத குணம் பெறல், கிரகதோஷ பரிகாரம், சனி, ஞாயிறு 8.30-5.00 p.m. ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (84140)

### தவறிவிட்டது

இராஜரட்ணம் உதயவஜனி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 607711860V) இருபாலை சந்திக்கும் நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கும் இடையில் 10.02.2001 அன்று தவறிவிட்டது. இதில் பெயர், முகவரி அனைத்தும் தனித்து சிங்களத்தில் மட்டுமே பதியப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் இருபாலை சந்தியில் உள்ள ஜோவ்டன் டக் படப்பிடிப்பு நிலையத்தில் ஒப்படைக்கும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். (84126)

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை சின்னம்மா என்பவருடைய தே.அ.அ (இல276625748V), வி.அ.அ (இல.091016488) என்பன கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் (பஸ்ஸினுள்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (84143)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவமூர்த்தி செல்வகுமார் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 090101337) 10.02.2001 அன்று யாழ் நகர்ப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கைசிவமூர்த்தி, 108/1, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (84155)

சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி எனும் முகவரியை உடைய காயத்திரி ஆறுமுகம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.815482930V), விசேட அ.அட்டை (இல.091050468) என்பன திருநெல்வேலி சிவன் கோயிலுக்கும் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆறுமுகம், வீரபத்திர் கோயிலடி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (84160)

### தேவை

COMPUTER இல் TAMIL, ENGLISH TYPE SETTING, ENGLISH - TAMIL TRANSLATION அனுபவம் உள்ளவர்கள் நேரில் சமுகம் தரவும். பெண்கள் மட்டும். தொடர்பு: சாருஜன், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்பாக. T.P.2961. (84161)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. அளவெட்டி மத்தி, தபாற்கந்தோருக்கு 150 மீற்றர் தூரம் கிழக்கே (6ஆம் கட்டையடி). (84145)

### விற்பனைக்கு

609, நாவலர் வீதியில் 11/2 பரப்பு காணி வீட்டுடனும் (சகல வசதிகளுடன் புதியது), பாடசாலை வீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் 3 1/2 பரப்புக் காணி வீட்டுடனும் (கடையுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு N.சத்தியரூபன், 354, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/15307)

55 CLT. 85 CLT கோட்லஸ் ரெலிபோன் (HAND PHONE), ஐப்பான் ASIA (முழு) சைக்கிள், 650W SHRIRAM HONDA ஜெனரேற்றர், YASHICA 10 B MODEL கமரா என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கேதீஸ்வரா, நெல்லண்டை, பருத்தித்துறை. T.P.070-212247(84159)

### திருமண சேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றமற்ற 1962 இல், அவிட்டம் 4ஆம் பாதம், 1965 இல், அச்சுவினி 4ஆம் பாதம் பிறந்த பெண்களுக்கு மணமகன்கள் தேவை. திருமண ஜாதகங்கள் கைவசம் உண்டு. ஜாதக கிரகதோஷத்திற்குத் பரிகாரம் செய்து வைக்கப்படும். ஸ்ரீராகவேந்திர ஆலயம், 159 A, கோயில் வீதி, நல்லூர். (84158)

## நலன்புரி நிலையங்களில் உள்ள பௌதிக வள விவரம் சேகரிப்பு

மூளாய்,பெப்.15

யாழ்.மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களின் பௌதிக வளங்கள் குறித்து விவரம் திரட்டப்பட்டு வருகின்றது.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து கொள்வதற்கும், போதிய அளவான பௌதிக வளங்களை விஸ்தரிக்கவும் வசதியாகவே இந்த விவரம் திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.செயலகம் இந்தப் பணியை துரிதமாகச் செயற்படுத்தி வருகிறது. இதற்கான சுற்றறிக்கைகள் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு திரட்டப்படும் விவரங்களை அடிப்படையாக வைத்தே எதிர்காலத்தில் நலன்புரி நிலையங்களில் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-99)

### தெரு நாய்களால் பெரும் தொல்லை

வட்டுக்கோட்டை மேற்கு சிவன் கோவில் பகுதியை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி தெரு நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால், அப்பகுதி மக்களும், அவ்வீதி யால் போக்குவரத்தில் ஈடுபடுவோரும் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

வீதியால் போவோர் வருவோரையும், சிறுவர், சிறுமிகளையும் தெரு நாய்கள் துரத்திக் கடித்து பெரும் தொல்லை கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-15)

### கிளாலி மீனவருக்கான கலந்துரையாடல்

கிளாலிப் பகுதியில் தமது உடைமைகளைக் கைவிட்டு வந்த கடற்றொழிலாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (க-117)


## மலிவு விலையில்

2001 ஆம் ஆண்டுக்கான வண்ணப்படக் கலண்டர்கள், இந்திய நாவல்கள், கொம்பியூட்டர் நூல்கள் விற்பனையாகின்றன.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2573 (84162)



## மாணவ மாணவிகளே!

ரூ.1000/- வீதம் 5 பேருக்கு அதிர்ஷ்டப் பரிசில்கள் வழங்கப்படும்.

நீங்கள் லாலாசோப், சன்சைன்சோப்பின் மேலுறைகள் 10 சேகரித்து உங்கள் பெயர்,பாடசாலை முகவரி, கற்கும் ஆண்டு என்பவற்றுடன் அனுப்பி வைத்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலியாகலாம்.

ஒருவர் எத்தனை மேலுறைகளையும் அனுப்பலாம்.
சன்சைன் சோப்பின் மேலுறைகளை இனங்கண்டு அனுப்பிவையுங்கள்.

லாலா சோப், அச்சுவேலி. (C 15297)


# வரணியில் சில பகுதிகளில் மீளக்குடியமர அனுமதி

தென்மராட்சி,பெப்.15

524 ஆவது படைப்பிரிவின் எல்லைக்குட்பட்ட தாவளை இயற்றாலை, வரணி இயற்றாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பகுதி மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் உள்ள எருவன் முகாமிலிருந்து வரணி வடக்கு வரையுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களையே மீளக் குடியமர அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

படையினர் பாதுகாப்பு வலயம் அமைத்துள்ளதால் தாவளை இயற்றாலை, வரணி இயற்றாலை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் அனைத்து பாதைகளும் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு மேலும் 50 உள்ளகத் தொலைபேசிகள்

## நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலும் 50 உள்ளகத் தொலைபேசி பொருத்தப்பட வேண்டும் என்று வைத்தியசாலை நிர்வாகத்தினால் சுகாதார திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார திணைக்களத்தினால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவில் நூறு உள்ளக தொலைபேசி இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் சில வார்ட்டுகள் மற்றும் பிரதான பகுதிகளுக்கு உள்ளக தொலைபேசி இணைக்கப்பட வேண்டியிருப்பதால் 50 தொலைபேசி இணைப்புகளுக்கான நிதியை ஒதுக்கித் தருமாறு வைத்திய நிர்வாகம் சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (க-5)

## 500,1000 ரூபா முத்திரைகள்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு 500ரூபா,1000ரூபா முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

### பகுதி B

வாழ்நாள் பேராசிரியரும்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத் தலைவருமான
பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம்
அவர்கள்

"21ஆம் நூற்றாண்டின் அபிவிருத்தியிலுள்ள சவால்கள் - யாழ்ப்பாணத்துக்கான உயிர்தொழில்நுட்பவியல் அணுகுமுறை"

என்னும் தலைப்பிலான கருத்துரையை நாளை (16.02.2001) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30(பு.நே) மணிக்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வழங்குவார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பேராசிரியர் அ.நவரத்தினராசா
தலைவர்
யாழ்.விஞ்ஞான சங்கம் - பகுதி B
(84163)



## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி நேசம்மா

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு சொர்ணவடலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது அளுத்மாவத்தை இல.385/8 இல் வசித்துவந்தவருமாகிய திருமதி.கந்தசாமி நேசம்மா, கொழும்பில் காலமானார்.

அன்னார், கந்தசாமியின் பாசமிகு மனைவியும், இராசதுரை, பரமேஸ்வரி, காலம் சென்ற சண்முகநாதன் மற்றும் சோமசுந்தரம், யோகநாதன், தனலெட்சுமி ஆகியோரின் சகோதரியும் அரியரத்னா, காலம் சென்ற அரியரட்ணம், மற்றும் துளசிமலர், தர்மராஜா, சொர்ணமலர், ரவீந்திரன், சாந்தக்குமார், ஜெயக்குமார், விஜியகுமார்(சுவிஸ்), ஜெயமலர், நவமலர், இன்பமலர், ஜெயந்திமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.02.2001) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் மாதம்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சி.இராமச்சந்திரன்(சந்திரன்)
(மருமகன்)
55.சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

385/8.அளுத்மாவத்தை,
கொழும்பு15.
T.P 077-605539 (84151)



# சென்ஜோன் அம்புலன்ஸ் தேசிய பாசறை - 2000

யாழ்.கொழும்பு மக்களும் ஐரோப்பிய வாழ் தமிழ் மக்கள் பலரும் T.B.C வானலையூடாக அறிந்த கீழ்க் காணும் கல்லூரி சார்ந்த யாழ். மண்ணின் வீரர்களை,அவர்களின் துணிவுக்கும் புயவலிமைக்கும் 20க்கு மேற்பட்ட வெற்றிக்கும், மீண்டும் சிறந்த மாவட்டம் என சரித்திரம் படைத்தமைக்கும் பாராட்டாதவர்கள்,இல்லை யெனலாம் "யாழ்.அவலநிலை-சென்ஜோன் அம்புலன்ஸ் உதவி' என்ற பாசறை நிகழ்வை குறிப்பிட்டு நாடகம் மூலம் பல இடங்களில் வெளிக்கொணர்ந்தபோது சிங்களவர்கள்,தமிழர்கள் நெஞ்சுருகி அழாதவர்கள் இல்லை. நீர்வாக தீர்மானத்திற்கு அமைய, குறுகிய கால பயிற்சியில் சிங்கள மொழியில் தேசிய கீதத்தை சகல மாவட்டங்களுக்கு இடையேயான போட்டியில் முதலாம் இடத்தை பாண்ட் வாத்தியத்துடன் இசைத்துபெற்றனர் என்றால் இவர்களின் கல்வி கலை, கலாசார திறனை உலக வரலாற்றில் நோக்கிப் பாராட்டப்பட வேண்டியவர்களே. தமிழ் மணம் வீசும் இந்த இளம் குஞ்சுகளை, வீரதீரர்களை தாம் நேரில் பார்க்க ஐரோப்பிய ஒன்றியம் மக்கள் சார்பில் பல நாடுகளுக்கு வரும்படி இலவச ஒழுங்கு செய்வதாக அழைப்புத் தந்துள்ளனர்.தங்கப்பதக்கங்கள் பெற்ற நா.குணபாலசிங்கம், சி.எழிலரசி, மேரிடுலாவையும் பாராட்டுகின்றோம்.

- தர்மலிங்கம் சிறீபிரகாஸ் - யூனியன் கல்லூரி
- நிஷாந்தராகினி பத்மநாதன் - யூனியன் கல்லூரி
- விஷ்ணுபிரியா சச்சிதானந்தராஜா - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
- அரியரட்ணம் பகீரதன் - வயாவிளான் ம.ம.வி
- எழிலரசி சிவப்பிரகாசம் - யூனியன் கல்லூரி
- ஆறுமுகம் விஜயதர்ஷன் - யூனியன் கல்லூரி
- சுபிதா குகராஜா - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
- சந்திரபாலன் விஜின்தன் - யூனியன் கல்லூரி
- பிரேமராஜா கஜமுகன் - வயாவிளான் கல்லூரி
- கந்தசாமி வசிகுமார் - யூனியன் கல்லூரி
- கார்த்திகா சிங்கராஜா - உரும்பிராய் இந்துக் கல்லூரி
- கருணானந்தராஜா பிரதாபன் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி
- சச்சிதானந்தராஜா மவுலீஸ்வரி - பிரதிநிதி பண்டத்தரிப்பு மகளிர்
- கதிரமலை தயாளினி - பொறுப்பாளர் உ.மா. ஆணையாளர்

பாராட்டுகின்றோம்! வாழ்த்துகின்றோம்!!

திரு. திருமதி.க. அருந்தவராஜா
ஆணையாளர்கள்.
(84154)

வரட்சியால் நெற்செய்கை பாதிப்பு:

# நஷ்டஈடு வழங்கி உதவுமாறு நவாலி விவசாயிகள் கோரிக்கை

வலி. தென்மேற்கு, பெப். 15

வலிகாமம் பகுதியில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு நவாலி விவசாயிகள் சம்மேளனம் கேட்டுள்ளது.

வலிகாமத்தில் 2000 -2001 காலப்பகுதியில் நிலவிய கடும் வரட்சியினால் 52 விவசாய சம்மேளனங்களுக்குட்பட்ட பகுதிகளில் நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினர் அமைச்சர், கே. என். டக்ளஸ் தேவானந்தாவை கடிதமூலம் கேட்டுள்ளார்கள்.

இதேவேளை பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவரமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்ப படிவங்கள்

இதேவேளை —

வரட்சியால் நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டு இதுவரை விண்ணப்பப்படிவங்கள் பெறாத விவசாயிகள் நாளை வெள்ளிக்கிழமைக்குள் பெற்றுக் கொள்ளுமாறு நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட நவாலி வடக்கு, கிழக்கு, தெற்கு விவசாயிகள் 160 பேர் இதுவரை விண்ணப் பப் படிவங்களைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-185)

# காணாமல் போனோர் குடும்பங்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் சுயதொழில் முயற்சி உதவி

யாழ்ப்பாணம், பெப். 15

1996 ஆம் ஆண்டு காணாமல் போனவர்களைத் தலைவர்களாகக் கொண்ட பத்து குடும்பங்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் சுய தொழில் முயற்சி உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சுகள் வழங்குவதற்கு மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்து வருகிறது.

இந்த உதவிகள் வழங்குவதற்கு கைது செய்யப்பட்டோர் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட பத்து குடும்பங்களின் பெயர் விவரம் வருமாறு:-

வீரசிங்கம் தவமணி (கொடிகாமம்), பி. இராசசோதி (கண்ணபுரம் நாவாந்துறை), எஸ். பரமேஸ்வரி (வல்வெட்டி), கே. தனலட்சுமி (அராலி றோட், சங்கானை), ஆர். மாலினி (நாவற்குழி — கைதடி), ஏ. மகேஸ்வரி (நிற்சாமம்), பி. உலகநாதர் (நல்லூர்), ஆர். மதிவதனி (வரணி), பி. மகேஸ்வரி (நிற்சாமம்), கே. அன்னலட்சுமி (நாவற்குழி).

மேற்குறிப்பிட்ட பத்துக் குடும்பங்களையும் பாதுகாவலர் சங்கச் செயலாளர் எஸ். சற்குணத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

## மீன்பிடி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், பெப். 15

மீன்பிடி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி நெறிக்கென பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையோர் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப் பப் படிவங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலவசமாக வழங்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கு 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஜீ. சி. ஈ. (சாதாரணதரம்) கற்ற பெண்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## செயலமர்வு

வலிகாமம்தெற்கு, பெப். 15

வலிகாமம் கல்வி வலயத்தில் 8 ஆம், 11 ஆம் தரங்களில் கற்பிக்கும் ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், சித்திரம் ஆகிய பாடங்களின் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி செயலமர்வுகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற உள்ளன. (க-152)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, பெப். 15

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த வெள்ளி நிகழ்வில் —

இவ்வார நிகழ்வாகத் 'திருமந்திரம்' என்னும் தொடரில் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளராகிய அ. குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். அறிமுகவுரையை பொ. அருந்தவநாதன் நிகழ்த்துவார். (க—173)

# வெளிநாட்டுக் கொள்கை குறித்து நீண்ட மாநாடு

## தூதர்களுக்கு அரசு விளக்கம்

கொழும்பு, பெப். 15

நாட்டின் சமூக பொருளாதார அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக்கொள்கைகள் பற்றி இங்குள்ள மேற்குலக நாடுகளின் தூதுவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறும் மாநாடொன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு கடந்த 11 ஆம் திகதி முதல் நடத்தி வருகிறது.

வெளிவிவகார அமைச்சில் நடைபெறும் இந்த மாநாடு பெப்ரவரி 14 ஆம் திகதி வரை இடம்பெறும்.

'சார்க்' அமைப்பு மற்றும் இருதரப்பு பலதரப்பு அமைப்புகளுடனான இலங்கையின் தொடர்புகள் குறித்தும் விரிவாக மாநாட்டில் கலந்துரையாடப்பட்டுவருகிறது.

வர்த்தகம் முதலீடு நாட்டின் பாதுகாப்பு நிலைமை, தகவல் தொழில் நுட்பம் மற்றும் வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணம் போன்ற விடயங்களும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கடமையாற்றவுள்ள பாடசாலைகள்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களில் இருந்து தீவகக் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட 45 ஆசிரியர்கள் கடமையாற்றவுள்ள பாடசாலைகளின் விவரங்கள் தீவகக் கல்வி வலயத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

45 ஆசிரியர்களும் இன்று தொடக்கம் தமது கடமையை ஏற்றுக்கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் பெயர்களும் அவர்களுக்குக் கடமையாற்ற ஒதுக்கப்பட்ட பாடசாலைகளின் விவரமும் வருமாறு:-

திருமதி ஆ. கணேசலிங்கம் (நாரந்தனை றோ.க.வித்.) திருமதி எஸ். முத்துக்குமாரசாமி (ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை), திருமதி சு. ஜ. ஜெயக்குமார் (புங்குடுதீவு சுப்பிரமணியம்மகளிர் வித்.).

திருமதி ஜி. பரந்தாமன் (வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.), திருமதி எம். விஜயகுமார் (காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி.), எஸ். கருணாகரன் (புங்குடுதீவு ம.வி.), திருமதி ரோ. பாலஸ்கந்தன் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.), திருமதி எஸ். நந்தகுமார் (கரம்பொன் சண்முகநாத வித்தி.), எப். ஜே. ஜெயக்குமார் (புங்குடுதீவு ம.வி.), த. முத்துலிங்கம் (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி.), ஆர். மன்மதராஜா (ஊர்காவற்றுறை புனிதமரியாள் பெண்கள் பாடசாலை).

திருமதி பி. சிவகுமாரன் (வேலணை தெற்கு ஐயனார் வித்தி.), செல்வி வி. வேலாயுதபிள்ளை (நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை), செல்வி எம். மங்களராஜேஸ்வரி (புங்குடுதீவு ம.வி.), செல்வி பி. மனோரஞ்சினி (புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்.), ஆர். தபநாதன் (மண்டைதீவு ம.வி.), திருமதி ஆர். குபேந்திரதாஸ் (வேலணை தெற்கு ஐயனார் வித்தி.).

திருமதி ஜெ. ஜீவானந்தம் [தம்பாட்டி அ.த.க. பாடசாலை], திருமதி ஏ. விமலன் [வேலணை சைவப்பிரகாச வித்தி], எஸ். ஜி. ஜோசப் அனுரா [காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி], எஸ். பரமேஸ்வரன் [புங்குடுதீவு ம.வி.], ஏ. செங்கதிர்ச்செல்வன் [நாரந்தனை றோ.க.த.க பாடசாலை], ஏ. லூ. புவிராஜசிங்கம் [புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி.], திருமதி பி. பாரதிதாசன் [ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி], திருமதி மே. யோ. ஜெயராஜா [வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி, வேலணை மேற்கு நடராஜா வித்தி.].

லா. ய. அன்ரனிற்றோ [நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை], திருமதி பு. ஞானசம்பந்தன் [அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி], திருமதி ரி. எஸ். றாமன் [ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி]. திருமதி நா. சுகிர்தலிங்கம் [தம்பாட்டி அ.த.க. பாடசாலை, கரம்பன் சண்முகநாத ம. வி.].

திருமதி எஸ். கங்காதரன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.), திருமதி பி. எஸ். ஜயசிந்த் (ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை, புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி.), திருமதி கு. ராஜேந்திரன் (நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.), ஜே. ஜெயமோகன் (புங்குடுதீவு ம.வி.), திருமதி பி. யோகநாதன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி.), திருமதி வீ. கருணாகரன் (ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை), செல்வி கே. காசிலிங்கம் (வியாவில் சைவ. வித்தி.), திருமதி பி. மகேந்திரன் (ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை), செல்வி வி. இராஜதுரை (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), ரி. திலீபன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), ந. குமணன் (காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), செல்வி கே. கந்தையா (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி.), செல்வி கே. குலசுந்தரி (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), நா. இந்திரநேசன் (மண்டைதீவு ம.வி.), கே. மனோகர் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), பி. அருமைநாதன் (தம்பாட்டி அ.த.க. பாடசாலை). (ஜ-10-51-ரி)

## அராலிப் பகுதியில் தொற்றுநோய் அபாயம்

அராலி, பெப். 15

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் வயிற்றுளைவு நோய்களால் பீடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையானவர்கள் வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இதேவேளை சுகாதாரப் பகுதியினர் மலத்தியோன் தெளித்தும், கிணறுகளுக்கு குளோரின் போட்டும் நோய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (க-17-ரி)

## விஞ்ஞானதின விழா

யாழ்ப்பாணம், பெப். 15

கொக்குவில் இந்துக் கல்லூரி விஞ்ஞானதின விழாவும், 'சாரதி' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யோ. கவிதாஸன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் என். உலகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

'சாரதி' சஞ்சிகையின் அறிமுகவுரையை பொறுப்பாசிரியர் வே. உருத்திரேஸ்வரனும் ஆய்வுரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் அ. சோமஸ்கந்தனும் நிகழ்த்துவார்கள்.

'ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்குரிய செயற்றிட்டம் மாணவர்களின் விருப்புக்குரியதா? வெறுப்புக்குரியதா?' என்ற தலைப்பில் வேம்படி மகளிர் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் கலந்துகொள்ளும் பட்டிமன்றமும் இடம்பெறும். (ஜ-173)

# வீட்டுத் தோட்டச் செய்கைக்கு விதைகள், உபகரணங்கள்

## 1,000 குடும்பங்களுக்கு வழங்க ஏற்பாடு

வலி. தென்மேற்கு, பெப். 15

பட்டினிக்கு எதிரான நிறுவனம் விரைவில் 1000 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைக்கான விதைகளையும் உபகரணங்களையும் வழங்கவுள்ளது

இடம் பெயர்ந்துள்ளவர்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 500 பயனாளிகளும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 500 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிர்ச்செய்கைக்கான உபகரணங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளில் பட்டினிக்கு எதிரான நிறுவன அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். (க-185)

# சுன்னாகம் பகுதியில் உணவு நிலையங்கள் மீது திடீர் பரிசோதனைகள்

வலிகாமம் தெற்கு, பெப். 15

சுன்னாகம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இடங்களில் சுகாதார விதி முறைகள் பேணப்படாத உணவு நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் சட்ட நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

கடந்தவாரம் சுன்னாகம் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் சுகாதாரம் பேணப்படாமை கண்டுபிடிக்கப்பட்டு அதன் உரிமையாளர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள வெதுப்பகங்கள், தேநீர் சாலைகள், உணவுச் சாலைகள் மீது சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே இப்பகுதியில் உள்ள உணவுடன் தொடர்புடைய நிலையங்களில் சுகாதார சீர்கேடுகள் நிலவுவதாக சுகாதாரப் பரிசோதகரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதன் காரணமாக வெதுப்பகங்கள், உணவுச்சாலைகள், தேநீர்ச்சாலைகள் போன்றவற்றின் உரிமையாளர்களை சுன்னாகம்பொதுச்சுகாதாரப் பரிசோதகர் வலிகாமம் தெற்கு பிரதேசசபை காரியாலயத்திற்கு அழைத்து, சுகாதாரம் பேணப்படுவதன் அவசியம் பற்றி வலியுறுத்திக் கூறி இருந்தார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் சகல உணவு நிலையங்களிலும் சுகாதாரக் குறைபாடுகள் சீர் செய்யப்படும் என உரிமையாளர்கள் அப்போது உறுதிமொழி அளித்தனர் எனினும் இன்றுவரை பல நிலையங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்ந்து நிலவுவதாக சுகாதாரப்பகுதியினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமையால், உணவகங்கள் மீது திடீர் பரிசோதனைகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நன்றி நவில்கிறோம்

10-02-2001 சனிக்கிழமை நடந்தேறிய எமது மகன்

## ஹர்ஸத்வனி அவர்களின்

ருதுசோபன விழாவில் பங்கேற்றிச் சிறப்பித்த குருவிற்கும் அந்தணப் பெருமக்களுக்கும்

நாதஸ்வர இசைமழை பொழிந்த N K. பத்மநாதன் குழுவினர், V.K. கானமூர்த்தி குழுவினர், K.R. சுந்தரமூர்த்தி குழுவினர், திரு. உதயநாதன் குழுவினர், L.S ஜெயநாதன் குழுவினர், திரு. கோபாலகிருஷ்ணன் குழுவினர், S, விஜயகுமார் குழுவினர், S சிவரட்ணம் குழுவினர் மற்றும் ஒலி, ஒளி - பருத்தி நகர் தம்பி அண்ணா, துளசி மணப்பந்தல், அனுசிகா மணப்பந்தல், யார்க்கரு தேவஸ்தான மக்கள், அல்லையம்பதி தேவஸ்தான மக்கள், துன்னையூர் மக்கள் மற்றும் பலவகையிலும் சரீர உதவி புரிந்த சிநேகித இளைஞர்கள் அனைவருக்கும் உதயன் வாயிலாக எமது மனப்பூர்வமான இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ராம். கெங்காதரக் குருக்கள்
தம்பதியினர்
(84189) (மயிலைபா), சாரதாபீடம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 — 03 — 1942

உதிர்வு 16 — 01 — 2001

## அமரர் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

(செயலாளர்,
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் – கட்டப்பிராய்)

அகவை ஐம்பத்தெட்டை அடைந்த கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபை செயலாளர் பாலசிங்கமே, நீ பாதி வழியில் உன் தொண்டை நிறுத்துவாய் என்று நாம் அறிந்தோமா?

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக!

பரிபாலன சபையினர்
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
கட்டப்பிராய், இருபாலை. (84183)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12 — 07 — 1930

ஆண்டவன் அடியில் 28 — 02 — 2000

## அமரர் நாராயணபிள்ளை வைத்திலிங்கம் விசுவலிங்கம்

(நிர்வாக உத்தியோகத்தர் - கல்விக்கோட்டம், வேலணை)
சமாதான நீதிபதி

**திதி:- 16–02–2001**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! ஆண்டு ஒன்று மறைந்தாலும் நான் உங்கள் மேல் வைத்த பாசமும், அன்பும் என்றும் மறையாது! உடலால் நீங்கள் என்னை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள், பாட்டுகள், தாளங்கள், அன்பு வார்த்தைகள் இன்னும் பல என் உள்ளத்தை விட்டுப் பிரியாது. வாழ்க்கை என்னும் பாதையைக் காட்டிவிட்டு மாயமாய் ஒன்றுமே சொல்லாது மறைந்தீர்கள். இதனை நினைத்து நித்தமும் தனிமையில் ஏங்கித் தவிக்கின்றேன். எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் நீங்களே என் தெய்வமாக வரவேண்டுமென வேண்டி, உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
அன்பு மனைவியும்,
குடும்பத்தினரும்.

6 ஆம் வட்டாரம், நயினாதீவு. (84178)

# இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 15

அளவெட்டி மற்றும் கோப்பாய்ப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கடந்த செவ்வாய் மாலை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சின்னையா சிவகுருநாதன் (வயது 43) என்பவர் மலைவேம்படிச் சந்தையில் வைத்தும்—

ஆஸ்பத்திரி வீதி, கோப்பாயைச் சேர்ந்த கிருஷ்ணன் சந்திரகுமார் (வயது 18) என்பவர் நாவாந்துறையிலுள்ள அவரது நண்பனின் வீட்டில் வைத்தும்—

கைதுசெய்யப்பட்டதாக அந்த முறைப்பாடுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருவரது கைது தொடர்பாகவும் பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை.

(உ-10)

# பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடத்தப்படவிருக்கும் ஆங்கில மொழிப் பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆறு மாதங்கள் நடைபெறும் இந்த பயிற்சிநெறியில் ஐம்பது இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(உ-73)

# கிரிக்கெட் இறுதியாட்டம்

வலி. மேற்கு, பெப். 15

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மோதுகின்றது.

சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்சியாளர் வி. கே. சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்; ஆசிரியை திருமதி என். சண்முகலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

(உ-175)

# முதலுதவி சுகாதார பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

வடமராட்சி, தென்மராட்சி பிரிவுகளைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்களுக்கான முதலுதவி சுகாதார பயிற்சி வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற உள்ளன.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை யாழ். மாவட்ட பிரிவு ஆணையாளர் க. அருந்தவராஜாவினால் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி வகுப்புகளுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி, தென்மராட்சி சுகாதாரத் தொண்டர் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-15)

# யுத்தத்தால் சேதமடைந்த பெற்றோலியம் அலுவலகத்தை திருத்த நிதி ஒதுக்கீடு இல்லை

யாழ்ப்பாணம், பெப். 15

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய அலுவலகம் போதிய இட வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

இந்த அலுவலகத்தின் ஒரு தொகுதி கட்டடங்கள் 1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்திருந்தன.

எனினும் புனரமைப்பு வேலைகளுக்காக இன்று வரை எதுவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை.

அதேசமயம் சேதமடைந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென நிதி ஒதுக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-6)

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
திரு. சி. சந்திரலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

## காத்தார் சின்னத்தம்பி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.
(சி/15315)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை இராசம்மா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசம்மா அவர்கள் நேற்று (14-02-2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் பரமானந்தம், துரைமணி, புஷ்பமலர் (கனடா), சாந்தமலர் (கொழும்பு), தெய்வேந்திரம், திலகவதி, இந்திராணி, தேவராசா (கொழும்பு), தவராசா, பாலச்சந்திரன் (டென்மார்க்), செல்வமலர் (கனடா), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற திலகராசா மற்றும் சங்கரசிவம் (கனடா). இரகுநாதன் (கொழும்பு), இராசமலர், பழனித்துரை, தெய்வேந்திரம், வரலட்சுமி (கனடா), யோகமலர் (கனடா), ஆறுமுகநாதன் (கனடா), விஜயலட்சுமி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், மயில்வாகனம், பொன்னுத்துரை மற்றும் சிவபாக்கியம், தங்கரத்தினம் இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், இராசையா, பாலசிங்கம், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் செல்லையா, தம்பிராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது கோண்டாவில் இல்லத்தில் இன்று (15-2-2001) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
செ. பரமானந்தம் (ஆனந்தி),
செ. தெய்வேந்திரம்
(மகன்மார்)

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில். (84193)

## செல்லையா சிவபாலசிங்கம் (பாலு)

(முன்னாள் வியாபாரி, சுன்னாகம் சந்தை)

தெல்லிப்பழை, கட்டுவனை பிறப்பிடமாகவும், ஏழாலை, சூறாவத்தையை வசிப்பிடமாகவும், தற்போது இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பில் வசித்து வந்தவருமாகிய செல்லையா சிவபாலசிங்கம் 13-02-2001 அன்று புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-சின்னத்தங்கத்தின் அன்பு மகனும், சூறாவத்தையைச் சேர்ந்த அன்னபூசனி (முன்னாள் தாதி, இணுவில் மக்லியோட் வைத்தியசாலை)யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலகுமார் மற்றும் பாலதயா, பாலரஞ்சித் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், சிவபாக்கியம் (உயிலங்குளம்), கனகசிங்கம் (ராசன் - மருதனார்மடம் சந்தை), சரஸ்வதி (சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவராசா (உயிலங்குளம்), இராஜேஸ்வரி (முன்னாள் தாதி, இணுவில் மக்லியோட் வைத்தியசாலை), அரியரத்தினம் (லீலா பேக் ஹவுஸ், சங்கானை), மயிலங்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் பரமானந்தம், அரியானந்தம், ஜீவானந்தம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதுக்குடியிருப்பில் 14-02-2001 புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்' நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
செ. கனகசிங்கம்
(ராசன் மருதனார்மடம் சந்தை)

குளத்தடி வீதி,
சங்கானை. (சி/15317)

# சித்திரவதை தொடர்பான.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

(161/1, 2ம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர்), கந்தசாமி பவநீதராஜா (5 வீட்டுத் திட்டம், நாவற்குழி, கைதடி), துரைசிங்கம் நந்தரன் (டி7, குருநகர்), சதாசிவம் விவேகானந்தன் (மந்துவில் கிழக்கு, சாவகச்சேரி), இம்மானுவேல் மரியஜெயசீலன் (பாடசாலை ஒழுங்கை, நாவற்குழி, கைதடி), தங்கவேல் சந்திரகுமார் (23, உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை), பூதத்தம்பி சதீஸ்குமார் (குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்), செல்வரட்ணம் தேவாநந்தன் (41/15, சங்கிலியன் வீதி, நல்லூர்), மகாலிங்கம் நவசெல்வன் (70/12, மத்தியவீதி, யாழ்), அப்புத்துரை ஜெயரட்ணம் (கொண்டலடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு),

துரைசிங்கம் குணசேகரன் (138/1, கொட்டடி வீதி, குருநகர்), தர்மரட்ணம் தர்மவசீகரன் (அளவெட்டி மேற்கு), குஞ்சுமணி உதயராஜா (ஈவினை, பன்னாலை, கட்டுவன்), சின்னத்துரை அம்பிகைபாலன் (இயற்றாலை, வரணி), இளையதம்பி திருஞானச்சந்திரன் (பிரம்படி வீதி, மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), ஜோகேஸ்வரன் சேரன் (9/1, அரசடி வீதி, அரியாலை), நடராஜா ஜீவரதன் (பளை), குலசிங்கம் அம்பிகைபாலன் (நாவற்குழி, கைதடி), பொன்னையா ஜெயராஜா (நாவற்குழி தெற்கு, கைதடி), நவரதன் ஆனந்தராஜா (நாவற்காடு, அச்சுவேலி), சண்முகதாஸ் முருகதாஸ் (215/19, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்.), கந்தர் விமலேந்திரன் (இயற்றாலை, வரணி), சிவகுருநாதன் ஆனந்தகிருஷ்ணன் (அம்மன் வீதி, பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி கிழக்கு),

சிவசுப்பிரமணியம் அரியதாஸ் (சுழிபுரம் கிழக்கு, வலிகாமம்), குகநாதன் விஜயகுமார் (460, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்), கனகசூரியர் சசிகுமார் (கைதடி, நுணாவில்), சுப்பிரமணியம் மகேந்திரன் (132, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), வல்லிபுரம் அற்புதநேசன் (127, வத்திராயன் வடக்கு, தாளையடி), கந்தசாமி ஞானாகரன் (விடத்தற்பளை மிருசுவில்), காசிப்பிள்ளை குகேந்திரராஜா (வீரபத்திரர் கோயிலடி சமரபாகு, வல்வெட்டித்துறை), ஆசீர்வாதம் பரணி(ராஜேஸ்வரி அம்மன் வீதி உடுவில், சுன்னாகம்), பத்மநாதன் சுதர்சன் (நுணாவில் மேற்கு சாவகச்சேரி), பிள்ளையன் பாஸ்கரன் (நுணாவில் மேற்கு சாவகச்சேரி), வேலன் இரத்தினசிங்கம் (ஐயனார் கோயில் வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு), செல்வராஜா கோபிராஜா (52/2 முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), அமிர்தலிங்கம் யுகேந்திரன் (அம்மன் கோயிலடி, அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை), இரத்தினசிங்கம் ராஜகுமார்(கைதடி கிழக்கு, கைதடி), நவரட்ணம் குமார் (டச்சு வீதி, கோப்பாய் தெற்கு), சசிந்தன் இராசையா (நவாலி வடக்கு, மானிப்பாய்) இளங்கநாதன் ஜெகதீஸ்வரன் (44,கொண்டலடி நல்லூர்), அன்ரனி நேசராஜா (குளமங்கால், மல்லாகம்), கணேசலிங்கம் கிருபாகரன் (நாவற்குழி தெற்கு, கைதடி), பழனி சர்வேஸ்வரன் (நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை), துரை தங்கத்துரை (ஏ.வி. வீதி, அரியாலை), எஸ்.திருவருட் செல்வன் (கோயிலாக்கண்டி, கைதடி), அன்ரனி அனிஸ்ரர்(15, பீச்றோட், பாசையூர்), ஜெயராஜா ஜெகன் (1,ஏ.வி. றோட், மூன்றாம் ஒழுங்கை, கொழும்புத்துறை), கந்தவனம் குகதாஸ் (கோப்பாய் மத்தி, கோப்பாய்), கந்தையா சிறீதரன்(ஒட்டுவெளி, மிருசுவில்), நன்னி நவரட்ணம் (கைதடி மத்தி, கைதடி), பி.ஜெயலலிதா (மறவன்புலோ, சாவகச்சேரி), இராஜதுரை சுரேஸ்குமார் (டிஸ்பென்சரி ஒழுங்கை, கல்வியங்காடு), எஸ்.கோபாலகிருஷ்ணன் (கைதடி தெற்கு, கைதடி),

(12 ஆம் பக்கம் பார்க்க)


## பொதுக் கூட்டம்

**நுணாவில் மட்டுவில் சரசாலை வணிகர் கழகம்**

**எமது வணிகர் கழக உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் 521, 522 பிறிகேட் பிரிவிற்கு சமர்ப்பிக்க வேண்டி உள்ளதால் எதிர்வரும் 19-02-2001 10 மணிக்கு நடக்கும் (கோண்டாவில் மேற்கு ஈசன் கல்வி நிலையத்தில்) பொதுக்கூட்டத்திற்கு சகல உறுப்பினரும் தவறாது சமுகம் தரும்படியும் இதுவரை எமது சங்கத்தோடு தொடர்பு கொள்ளாத வர்த்தகர்களும் இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்கும்படியும் கேட்கப்படுகிறார்கள்.**

செ.நித்தியானந்தன்
*நிர்வாகச் செயலாளர்.*

(84192)



## வணங்குகின்றோம்

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**



**பீடாதிபதி**

*கலாநிதி*

*திருநாவுக்கரசு கமலநாதன்*

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தினூடு கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளமையையிட்டு எமது கல்லூரித் தாய் பெருமையடைகிறாள். அப் பெருமையில் இணைந்து எம் தலைவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

**ஆசிரிய மாணவர்கள்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

(சி15313)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.மாநகர ஆணையாளராக சிறப்பான சேவையாற்றி வடக்கு – கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள



**உயர்திரு. வே. பொ. பாலசிங்கம்**

அவர்கள் சேவை தொடர்ந்தும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**சிவா நறுமணப் பூங்கா,**

*இல.288, ஆஸ்பத்திரி வீதி,*
*(சத்திரசந்தி அருகில்),*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல.021-2567*

(84177)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வேலணை மேற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தலைவரும், ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத் தலைவரும், தீவுப் பகுதி சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் முன்னாள் தலைவருமாகிய**



**திருவாளர் க.இளங்கோவன் அவர்கள்**

(முன்னாள் தபாலதிபர், தற்போதைய தீவுப்பகுதி விவாகப் பதிவாளர்)

**29.01.2001 அன்று யாழ்.மாவட்ட நீதிவான் திரு. R.T. விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரது சேவைகள் தொடர எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.**

ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்,
ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம்,
வேலணை மேற்கு வேலணை.

(84187)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சமூகஜோதி**
**உயர்திரு.இராமு முருகேசு நாகலிங்கம்**

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சமூகஜோதி உயர்திரு. இராமு முருகேசு நாகலிங்கம் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு.எஸ்.சிறீஸ்கந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் மாவிட்டபுரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி கற்று கூட்டுறவுத்துறையின் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் சிரேஷ்ட கணக்காளர், சிரேஷ்ட முகாமையாளர், பிரதம உட்துறை கணக்காய்வாளர், நிறுவன திட்டமிடல் பிரிவுத் தலைவர் போன்ற பல உயர் பதவிகளை வகித்துள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்து திறமைச் சித்தி அடைந்துள்ளார்.

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம். மாவை பாரதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகராகவும் நீண்டகாலத் தலைவராகவும் போஷகராகவும் சேவையாற்றி வருகிறார். மாவை விநாயகர், அம்பாள் ஆலயங்களின் தர்மகர்த்தா சபையின் ஸ்தாபகரும் ஆவார்.

இவர் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் ஸ்தாபகராகவும் நீண்டகாலத் தலைவராகவும் அதன் பின்னர் பிரதம போஷகராகவும் வழிகாட்டித் தலைவராகவும் தொண்டாற்றி வருகிறார்.

குறித்த சமாசத்தின் திட்டங்களுக்கு நிதிவழங்கும் நிறுவனமாக புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்து அதனை நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகச் செயற்பட அரும்பாடுபட்டவர்.

குறித்த சமாசமும் நிதியமும் இணைந்து பல உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வசதிகுறைந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல், ஆதரவற்ற தாய்மாருக்கு உதவுதல், உயர்கல்வி கற்பதற்கு உதவுதல், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு உதவுதல், போட்டிப் பரீட்சைகளை நடத்தி ஊக்குவித்தல் போன்ற இன்னும் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறார்.

இவர் ஆற்றிவரும் சேவையினை நாம் இச்சந்தர்ப்பத்தில் மனமகிழ்வுடன் நினைவு கூர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சமூக, கல்வி, சமய, கலாசார மேம்பாட்டிற்காக அயராது சேவையாற்றும் இவர் சேவை தொடரவேண்டுமெனவும் நீண்ட ஆயுளுக்கு இறையருள் வேண்டி எமது இதயம் கனிந்த பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

***இவர் சேவையை மனமார வாழ்த்தும்:***

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், மாவை பாரதி சனசமூக நிலையம், மாவை விநாயகர் *மாவிட்டபுரம்*. ஆலய தர்மகர்த்தா சபை, மாவை அம்பாள் *தெல்லிப்பழை*. ஆலய தர்மகர்த்தா சபை.

(84188)

அனைத்தும் சனி,ஞாயிறே

LOGIC
சயந்தன்

★ பிரிவு 1 → 1-2 p.m.
அலகு ரீதியான மீட்டல்
★ பிரிவு 2 → 2-3 p.m.
வினா விடை
★ A/L 2002 → 8-9 a.m.
குறியீட்டு அளவையியல்
★ A/L 2003 → 9-10 a.m.
ஆரம்ப அலகிலிருந்து

விக்னா
கல்வி நிறுவனம்
(84180)

## சித்திரவதை.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலசப்பு அல்போன்ஸ் வில்டன் (11, மத்திய் வீதி, குருநகர்), சிவமுத்து முனீஸ்வரநாதன் (6ஆம் கட்டை அறுகு வெளி, தனங்கிளப்பு), சீனியர் தர்ம லிங்கம் (கந்தரோடை, சுன்னாகம்), செல்வரட்ணம் அருணன் (கோண்டா வில் மேற்கு, கோண்டாவில்), சின்ன ராசா ரங்கன்(நுணாவில் மத்தி, சாவகச்சேரி), சின்னத்தம்பி குணேந் திரன்(குடமியன் வரணி), சின்னத் துரை கதிரவேற்பிள்ளை (கரவெட்டி), வல்லிபுரம் பாஸ்கரன் (யாழ்ப்பாணம்), திருநாவுக்கரசு புத்தகரன் (மறவன் புலோகிழக்கு, சாவகச்சேரி), பென டிற் அல்போன்ஸ் (1,மத்திய கிழக்கு வீதி, குருநகர்), சுபாகரன் ஞானேஸ் (அராலி கிழக்கு, அராலி), ஐயம் பிள்ளை நிருபா (கைதடி வீதி, இணு வில்), சரவணமுத்து சிறீதரன் (பழைய வாய்க்கால், மிருசுவில்), தம்பிப் பிள்ளை கோவிந்தசாமி(அராலி வீதி, சங்கானை), பிராஜேந்திரகுமார் (அல் வாய்).

(தொடரும்)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.15

வடமராட்சி கிழக்கில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் மூடப்பட்ட 11 பாடசாலைகளையும் முழுமையாக இயங்க வைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புலோலியில் உள்ள வட மராட்சி வலயக்கல்விப் பணி மனையில் மேலதிக மாகாணக் கல் விப் பணிப்பாளர் நா.தணிகாசலம் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி பாடசாலைகளின் அபி விருத்திச் சங்கங்களின் தலை வர்கள் மற்றும் செயலாளர்களை தவறாது பங்குபற்றுமாறு வடமராட் சியிலிருந்து இடம்பெயர்ந்தோர் நல னோம்புச் சங்கம் கேட்டுள்ளது.

(ம-173)

## தென்மராட்சி ஆசிரியருக்கு

எதிர்வரும் சனி,ஞாயிறு தினங்க ளில் நடைபெறவிருந்த தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 11 இல் சுகாதரமும் உடற்கல்வியும் பாட ஆசிரியர்களுக்கான சேவைக் காலச் செயலமர்வுகள் இம் மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் நெல் லியடி மத்திய மகாவித்தியாலயத் தில் நடைபெறும். (க-117)

புதிய வீடியோ போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.வீதி,கோண்டாவில்.
(C/15320)

விற்பனையாகின்றன
1) தமிழ் மூலம் கொம்பியூட்டர் புத்தகங்கள்.
2) கொம்பியூட்டர்பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கான– NCCA-PART - I
3) Omos - SELECTION புத்தகங்கள்
விற்பனையாகின்றன
மக்மிலன் புத்தகசாலை
(15265) இல.3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ஆகாஷ், சுபாஷினி
மணிவண்ணன் நடித்த
பெண்கள்
பிரதி உடன் பெற்றுக்கொள்ளலாம்
அல்டி
எலக்ரோனிக்ஸ்
15,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/15318)

வேலையாள் தேவை
மும்மொழியும் தெரிந்த சிட்டை எழுதுநர் தேவை.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(84195)

"இறுதிப் பிரிவு"
O/L 2001, GR.10
விஞ்ஞானம் குமரன்
ஆரம்பம்:- 17-02-2001
சனி மதியம் 12 மணி
54,இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம். (84110)

"பங்குடைமை"
A/L-2002
கணக்கீடு
D.Sam
ஆரம்பம் : 18-02-2001
ஞாயிறு மதியம் 12மணி
DMI
யாழ்.நகர். (C/15268)

DCS
விரிவுரைகள் ஆரம்பம்
(February பிரிவு)
2001/2002
கல்வியாண்டுக்கான
புலமைப்பரிசில் திட்டத்தில்
தெரிவு செய்யப்பட்டு பதிவு
செய்த மாணவர்களுக்கான
விரிவுரைகள் 17.02.2001
(சனிக்கிழமை) அன்று 10.30
மணிக்கு (பு.நே)
ஆரம்பமாகும்
குறிப்பு:
இதுவரை பதிவு செய்யாத
மாணவர்களும் உடனடியாக
பதிவுகளை மேற்கொண்டு
விரிவுரைகளில்
கலந்துகொள்ள முடியும்
Director(Ad.)
Jaffna. Nelliyadi.
(C/15316)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
ஆகாஷ், திவ்வியஸ்ரீ,
மணிவண்ணன் நடித்த
பெண்கள்
வீடியோ விமல்
(C/15319) யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### ஆறுப்பிள்ளை வைரமுத்து

(பொல்காவலை வைரமுத்து)

பலந்தைகட்டி, தெல்லிப்பழை யைப் பிறப்பிடமாகவும் டச்சு ரோட், சங்குவேலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப் பிள்ளை வைரமுத்து 14-02-2001 நேற்று நண்பகல் 12 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி வைரமுத்து சின்னமணியின் அன் புக் கணவராவார்.

அன்னாரது இறுதிக்கிரியை கள் இன்று 15-02-2001 பிற்பகல் ஒரு மணிக்கு டச்சுரோட், சங்கு வேலியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.கதிரவேல்
(மகன் - பொல்காவலை)

*களவோடை அம்மன் வீதி,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (சி15322)

## நினைவில் நீங்கா ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 - 03 - 1907



மறைவு 27 - 02 - 2000

### அமரர் பொன்னம்பலம் வடிவேலு

(சிங்கர்)

திதி:15-02-2001

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டொன்று ஆனதே ஐயா!
உங்கள் அன்பும் பரிவும் பாசமும் என்றும்
எமது நெஞ்சை விட்டகலாது.

உங்கள் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

*136, கே.கே.எஸ்.வீதி,*
*சுன்னாகம்.*

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(84146)

மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்
(பூங்கன்றுகளும் மின்குமிழ்களும்)
பிளான்ட் பரடைஸ்
நாளை 16 முதல்
17,18 ஆம் திகதிகளில்
(16 ஆம் திகதி மாலை 3.00 மணிமுதல் 18 ஆம் திகதி இரவு 9.00 மணிவரை)
கண்காட்சியின் விபரங்கள்
புதிய வகையான குறோட்டன் கன்றுகளுடன் ஏனைய பூங்கன்றுகள்
* இராட்டினம்
* பலவர்ணக் குடைகள்
* சொகுசு ஊஞ்சல்
* பகம்புற்றரைகள்
* கொரியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கார்கள்
* அலங்கார மின்குமிழ் வளைவுகள்
* இராட்சத இராட்டினம்
* இராட்சதக் குடை
* தண்வீர் சிந்திகள்
* பூப்பந்தல்கள்
* வர்ண மின்குமிழ் பந்தல்கள்
* குளிர்களி மையம்
போன்றவை
பார்த்து மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(கைலாசபிள்ளையார்கோயில் சந்திக்கும் ICRC சந்திக்கும் இடையில்.)
குறிப்பு:- கண்காட்சி நடைபெறும் தினங்களில் வீடியோ, புகைப்படப்பிடிப்பாளர்கள் படம்பிடிக்க விரும்பின் எம்மிடம் முன்கூட்டியே தொடர்புகொள்ள வேண்டப்படுகிறீர்கள்.
(c/15310)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வஸ்ரியாம்பிள்ளை மரியம்மா

(மிருசுவில்)

தவசிகுளம் மிருசுவிலைச் சேர்ந்த திருமதி வஸ்ரியாம்பிள்ளை மரியம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் மேரி றோசா, ஜேசுதாஸன், றீற்றா தேவதிரவியம் (தாதி, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் தாயாரும் மரியநாயகம், ஞான மலர், தேவதிரவியம், (சிமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15-02-2001) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனையின் பின் காக்கைதீவு சேமக் காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*வைத்தீஸ்வரா வித்தியாலயம்*
*அருகில்,*
*ஆறுகால்மடம்.*

தகவல்:
றீற்றா தேவதிரவியம்
(மகள்) (சி15323)

### சி.சிவபாலசிங்கம்

(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஏழாலை தெற்கு தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த சி.சிவபாலசிங்கம் 14.02.2001 அன்று முல்லைத்தீவில் காலமானார்.

அன்னார் அரியபூசணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பால குமார் மற்றும் பாலதயா, பாலரஞ்சித் ஆகியோரின் அன்பு தந்தையுமா வார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை முல்லைத்தீவில் நேற்று நடை பெற்றது.

அன்னாரின் மறைவை ஒட்டி ஏழாலை தெற்கு இல்லத்தல் இன்று (15-02-2001) வியாழன் மாலை 4.00 மணிக்கு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் ஆராதனை நடைபெறும்.

உற்றார் உறவினர் கலந்துகொள்ளவும்.

தகவல்:
அரியநாயகம், அரியானந்தம்
(மைத்துனர்)

(சி15321)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.